934

Reg. No. M. 2330

SIDDHANTHAM
Vol. 24—No. 1

934
1—51

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தங்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

| மலர் 24 | விக்ருதி தை 1951 ஜனவரி | இதழ் 1 |
|---|---|---|

கட்டுரை — பக்கம்

1. [illegible] ... 1
2. [illegible] ... 1[illegible]
3. [illegible] ... 1[illegible]
4. [illegible] ... 14
5. [illegible] ... 17
6. [illegible] ... 23
7. [illegible] ... [illegible]
8. [illegible] ... 1—16

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

[illegible] எம். இராமச்சந்திரன் செட்டியார், [illegible]
[illegible] வித்வான் [illegible]
[illegible] சித்தாந்த மகா சமாஜம்
[illegible]

3L
RE73 [illegible]
A51·24·1.
186872

**31—12—50**

## சமாஜ பொதுக் காரியக் கூட்டம்

### தேர்தல்கள்

### நிர்வாக சபை (1951)

தலைவர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை.

உபதலைவர்கள் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார், எ. இராமச்சந்திரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

பொதுக்காரியதரிசி - க. அரங்கசாமி

வரவேற்புக் காரியதரிசி - சுப்பிரமணியஞ் செட்டியார், எம். ஏ. அவர்கள்

உதவிக் காரியதரிசி - கே. த. கிருஷ்ணசாமி

பொருட்காப்பாளர் - டி. கே. சுந்தரம் பிள்ளை,

பத்திராசிரியர் - சி. எம். இராமச்சந்திரம் செட்டியார்

உதவிப் பத்திராசிரியர்-வித்வான். வை. குஞ்சிதபாதம் பிள்ளை

மற்ற அங்கத்தினர் : எஸ். டி. அரசு, ச. நடேச முதலியார், சி. சுந்தரவிநாயக முதலியார், ஆர். ஷண்முகசுந்தரம் செட்டியார், பி. ஆலாலசுந்தரம் செட்டியார், ச. நமசிவாய முதலியார், ஏ. சோமசுந்தரம் செட்டியார், ஆர். சே. சச்சிதானந்தம், வே. தியாகராய முதலியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், பூ. சமரபுரி முதலியார், பரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்.

### வெளியூர் ஆலோசனை அங்கத்தினர்கள்

செங்கற்பட்டு - வா. தி. மாசிலாமணி முதலியார், ஆர். ஆதிநாராயண முதலியார்

தென்னார்க்காடு - சே. முத்துகிருஷ்ணப் பிள்ளை, எஸ். இரத்தினசாமி [illegible]

Reg. M. 2330

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 24 | விக்ருதி தை 1951 ஜனவரி | இதழ் 1

## சைவர் மாநாட்டு

## வரவேற்பு உரை*

சைவ சித் தாந்த சமாஜம் தழைத்தோங்கும்
கைவல்யதாதா கருணை செயச்—சைவர்
உளங்கசிந்தன் ஞன்பணியில் ஒத்துழைக்கத் தொண்டர்
தளர்ந்திரண்டு தாங்கவந்தால் தான்.

மக்கள் மனத்தில் பக்தியை வேரூன்றி நிற்கச் செய்ய வந்திருக்கும் ஞான விளக்குகளே வருக! சிவநேசச் செல்வர்களே வருக! செல்விகளே வருக! நமது முன்னோர்கள் சைவத்தைக் கண்டும் கேட்டும் அனுபவித்ததைக் காட்டிலும் நிச்சயமாகத் தங்கள் காலத்தில் பதின்மடங்கு இன்புற்று முத்திநெறியைக் கடைப்பிடிக்கப் போகும் இளைஞர்களே வருக!

பல்வேறு அலுவல்களுக்கிடையில், சிரமத்தைப் பாராட்டாமல் இம்மகாநாட்டைத் திறந்து வைக்க இசைந்து வந்திருக்கும் இராமநாதபுரம் மாவட்ட நிர்வாக அதிகாரி திருவாளர் உத்தண்டராம பிள்ளை அவர்களுக்கும் மற்ற

*முகவை என்னும் இராமநாதபுரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 45-வது ஆண்டு நிறைவு விழா மகா நாட்டிற்கு வந்துள்ள எல்லோருக்கும் அன்புடன் அளித்தது.

எல்லாருக்கும் எங்கள் மனமுவந்த வரவேற்பை வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

சைவம் தழைத்த பாண்டி நன்னாட்டிலே தலைசிறந்தது எங்கள் பகுதியாகிய இச்சேதுநாடு. "கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம், வீடவே சக்கரத்தால் எறிந்துபின் அன்புகொண்டு தேடிமால் செய்த கோயில்" என்றவாறு சாக்ஷாத் மஹா விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமபிரானே பூலோகத்தில் சிவலிங்கத்தின் மகத்துவத்தை எடுத்துக் காட்டிய இராமேச்வரமும், தேவாரப் பாடல்பெற்ற மற்ற கோவில்களில் புனவாசல், ஆடானை, திருப்பூவணம், காளையார் கோவில், திருச்சுழியல் முதலியவையும், மணிவாசகப் பெருமானின் அன்பு கசியும் திருவாசகத்திற் குறித்த திருப்பெருந்துறையும், உத்தரகோசமங்கையும், தென்னாட்டிற் பல ஆலயங்களிலுள்ள விக்ரஹங்களையும், சிற்பங்களையும் சிதைத்து வந்தவனும், நவாப்பின் படைத் தலைவனுமான மல்லிகபூர் என்னும் பிற மதத்தினனுடைய ஊமைப் பெண்ணைப் பேச வைத்தவரும், தெய்வத்தில் நம்பிக்கை விட்டுச் சந்தேகப்படுபவர்களைப் பலவழியிலும் சோதித்துத் தன் சந்நிதிக்கிழுத்து இன்னலைப் போக்குபவருமான நாகநாதர் எழுந்தருளும் திருமருதூர் என்னும் பதியும் இன்னும் திருப்புல்லாணி திருக்கோஷ்டியூர் போன்ற சிறந்த வைணவத் தலங்களும் இந்நாட்டின் எல்லைக்குள்தான் இருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட தலங்களை நாடி வந்து இறைவர் பாதம் படிந்ததால் இப்பகுதியைப் புனிதமாக்கின தவசிரேஷ்டர்கள் பலர். இவருள் எம்மதத்தோரும் மகான் என்று சம்மதிக்கும் சமரஸ ஞானியும், சில காலத்துக்குமுன் பல துறையிலும் முன்னணியிலிருந்தவரும் இப்பொழுது அந்தப்பிராபல்யம் சற்றுக் குறைந்திருந்தாலும் கூடிய சீக்கிரம் இவ்வூரில் சமயமும் கல்வியும் பெருக புகழ்வானோங்க எங்கும் ஞான மயமாக்கப் [illegible]றவரும், எங்களை யெல்லாம் காத்து [illegible]வருமான [illegible] அடிகள், இவ்வூரில்தான் சமாதி கொண்டிருக்கிறார். இவருடைய ஞானமொழிகள்

186872



புகாத இடங்கள் இந்நாட்டில் கிடையா. சமயத்தை ஆராய்ந்து பரப்பிவந்த மடங்களையும் அச்சமயங்களில் முழு நம்பிக்கையுடன் யாத்திரையாக வரும் பக்தகோடிகள் தங்கும் சத்திரங்களையும் போஷித்து வந்த நெல்வேலிகள் கட லாய்க் கிடப்பது, இந்நாட்டு அரசர்களும் மக்களும் ஒத்துழைத்துத் தெய்வ வழிபாட்டின் மகிமை அறிந்து அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ததற்கு அத்தாட்சியாகும்.

இந்துமதத்தின் உண்மையைச் சர்வதேசத்தாரும் கலந்தசபையில் விளக்கி உலகெலாம் உணரச்செய்த உத்தமர் விவேகாநந்தரின் அன்புக்கும் போற்றற்கும் உரியவரான பாஸ்கரஸேதுபதி அவர்களும் அவர் பந்துவான பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்களும் சமய வளர்ச்சியிலீடுபட்டுச் சமய சம்பந்தமான பிரசங்கங்களை ஆதரித்துச் செய்வித்தும் தாமே செய்தும் பெருந்தொண்டு புரிந்தார்கள். ஒருசமயம் சேதுபதி அவர்கள் தென்காசியில் விபூதி ருத்ராக்ஷத்தின் மகிமையைப் பற்றிப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது கேட்போரிடையே விபூதி எனக்கு எனக்கென்று குழப்பம் உண்டான நெருக்கடியில் சிலருக்கு உடற்சேதங்கூட ஆகிவிட்டதென்று சொல்லக் கேட்கிறோம்! அவ்வளவு பெருங்கூட்டம்! அதற்குமேல் அவ்வளவு ஆர்வம்! இவ்விரு புண்யாத்துமாக்களும் இந்நாட்டினரிடம் இட்ட ஞானவித்தே, அம்மக்கள் வழியில் தோன்றிய எங்களுக்குக் கொஞ்சமும் ஈசனருளை நாடாத வஞ்சகர்கள் சூழ்ந்து மனதைக் கலக்கினாலும் தைரியம் குன்றாமல் இன்று கூடும் மகாசமாஜம் போன்ற குழுக்களுக்கு அளிக்கும் வரவேற்பில் பக்திசிரத்தையும் உற்சாகமும் அளிக்கின்றதென்றால் மிகையாகாது.

இன்று இம் மகாநாடு இவ்வூரில் கூடுவது இரண்டாவது தடவை ஆகும். முதலில் 1911-ம் வருஷம் ராஜராஜேச்வர சேதுபதியவர்கள் ஆதரவில் அவர்கள் மாப்பிள்ளை கனம் நடராஜதுரை அவர்கள் முன் வந்து வரவேற்க மகாநாடு கூடி விழாச் சிறப்பாக நடந்ததென்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் சில பத்தாண்டுகளுக்கு மழையின்மையால் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் அரசாங்கத்தார் சம்பந்தப்பட்ட வரிகளைத் தள்ளிக் கொடுக்க மறுக்கவே விவசாயிகள் மேலதிகாரியான ஆங்கிலேயர் ஒருவரிடம் நேரில் சென்று முறையிட்டார்கள். அச்சமயம் தர்மபுரம் ஆதீன கர்த்தாவாகிய கந்தப்ப தேசிகர் நெல்லை வந்து தங்கி இருந்ததைக் குறித்து அவ்வதிகாரி விவசாயிகளை நோக்கி "உங்கள் பாதிரியிடம்போய் மழை வேண்டுமென்று கேளுங்கள்" என்று ஏளனமாகப் பதிலளித்தார். சமயத் தலைவரிடம் ஜனங்கள் சென்று இதனைக்கூற தேசிகரும் சைவத்தின் உண்மையைப் பிரத்தியக்ஷமாகக் காட்ட விரும்பி உடனே யோக நிட்டையில் அமர்ந்தார். சிவபூசை முடிந்த பின்,

சைவ சமயம் தழைக்கவெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில்—ஐவரைவென்
றானந்த வெள்ளத் தழுந்துவது முத்தியெனில்
வானங்காள் பெய்க மழை.

என்ற வெண்பாவைச் சொன்ன உடனே இயற்கை சைவத்தின் சத்தியத்திற்கு அடிபணிந்தது! எங்கிருந்தோ வந்து மழையும் பெய்தது. இச்சம்பவத்தைக் கண்டு அதிசயித்து ஆங்கிலேய அதிகாரி மடாதிபதியை நேரில் வந்து பாராட்டி துரைத்தனத்தார் சார்பாக காணிக்கையும் செலுத்திச் சென்றார். பாமரர்களும் உணரும் முறையில் இப்படி நடப்பதனால் சைவத்தின் பெருமையை அளக்க முடியுமா? பல நூற்றாண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலையில் அரசு புரிந்த பிரபுட தேவராயர் சபையிலேயே எல்லாருக்கும், 'உதையதாம மார்பான பிரபுட தேவ மகாராஜ, உளமுமாடமாதேவர் பெருமானே!, மயிலுமாடி நீயாடி வரவேணு' மென்று அருணகிரியார் பாட முருகக்கடவுள் தந்தை தாயுடனும், மாமன் மாமியுடனும் காட்சியளித்திருக்கிறார். சிவஞானம் குன்றி ஏனைய மார்க்கங்கள் இந்நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த காலத்தில் முருகப்பிரானே ஞான சம்பந்தராய் அவதரித்து விரோதிகளை வாதில் வென்றும், தேவார



ஏட்டை வைகையாற்றின் வெள்ளத்தில் எதிர்த்து நீந்தும்படி செய்தும், நோய் வாய்ப்பட்ட கூன் பாண்டியனை நெடுமாறனாக்கியும் சைவத்தின் பெருமையை நிலைநாட்டினார். அச்சமயம் அவர் திருவாய் மலர்ந்தருளிய 'வாழ்க அந்தணர்' என்ற தேவாரத்தை, சமாஜத்தில் வெளியிடும் மாதாந்திர பத்திரிகைக்குத் தலை அணியாகக் கொண்டதை நாங்கள் மிகவும் மெச்சுகிறோம். இத்தேவாரத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் காரணமாயிருந்த அந்தப் பாண்டியன் காலத்தைக் காட்டிலும் நிலைகுலைந்த நமது காலத்தில் பிரச்சாரத்திற்கு மேற்கண்ட செய்யுள் குறித்தெடுக்கப்பட்டிருக்கிறது மிகவும் பொருத்தமே. 'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயமே' என்று பாடி மிதந்த அப்பர் அடிகளின், 'தன்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற திருவாக்கைப் பத்திரிகையின் இலக்கியக் கோளாகக் கொண்டது எத்தனையோ சென்மங்கள் எடுத்தாக வேண்டுமென்பதையும், அவற்றில் உழலாமல் நிறுத்த ஈசன் அருள் ஒன்றினால்தான் முடியுமென்பதையும் கூறும் நமது சமயத்தின் தனிப்பெருமையை உணர்த்துவதோடு, உரிமை! உரிமை! என்ற கோஷம் மட்டும் எங்கும் எழும்பி நமது சமூகம் நிதானம் இழந்து புரண்டு விழாமல் உரிமையை விடக் கடமையின் முக்கியத்துவத்தைப் புகட்டுவதைக் குறித்தல் போற்றத் தகுந்தது. கடமைக்கும் அதன் மூலம் பிறக்கும் உரிமைக்கும் நமது முன்னோர்கள் செவ்வனே வகுத்த கட்டுப்பாடுகள் அந்நியர் படையெடுப்புகளாலும் ஆட்சிகளாலும் பாதிக்கப்பட்டதனாலும், ஜாதித்துவேஷமும் பொருளாதாரத்தின் தாறுமாறான பிரிவினைகளும் இடம் பெற்றதனாலும் நமது நாகரிகம் ஆபத்துக்குள்ளாகி இருக்கிறது.

'அறிவை அறிவால் அறிதல்' என்று சொன்னால் இதை மேனாட்டு மொழிகளில் மொழி பெயர்ப்பது எளிதன்று. இச்சிந்தாந்தமே நம் நாட்டினர்க்கு ஆண்டவன் கொடுத்திருக்கும் தனிச்சொத்து. இக்காரணத்தால் மற்ற நாட்டா

ரும் எப்பொழுதாவது இப்புண்ணிய நாட்டில் பிறந்தோ அல்லது நம் மொழியைப் பயின்றோ நமது சித்தாந்தத்தின் கருத்தை அறிந்து நடந்துதான் முக்திபெற வேண்டுமென்று சொல்லக்கூடிய அவ்வளவு அரிய இச்சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரீகத்தின் சின்னங்கள் எத்தனையோ விதத்தில் தாக்கப்பட்டு வருகின்றன. கடவுள் உண்டு, அவரிடம் பயபக்தியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை பரவியிருக்கும் பொழுது சாதிக்கவேண்டிய நிலைகளுக்குச் சௌகரியங்கள் செய்து கொடுப்பதுதான் தேவை. அதாவது, சரியைக்கும், கிரியைக்கும், யோகத்திற்கும், ஞானத்திற்கும் என்ற கிரமத்தில் செய்வதாலும், ஆனால் தெய்வமில்லை என்றும் இருந்தால்தான் என்ன என்றும் மக்களின் மனது மயக்கத்துக்குள்ளாக்கப்பட்டு வருகின்ற காலத்தில் மயக்கத்தை நிவர்த்தி பண்ண, முதலில் பிரசாரம் செய்தபின்தான் பிற செய்வதில் பயன் உண்டு. ஞான நூல்களை ஆராயாது விஞ்ஞான சாஸ்திரங்களை மட்டும் ஆராய்ந்த சிலருக்கும் பல காரணத்தால் மெய்ஞானத்தை தூஷிக்க விஞ்ஞானத்தைப் பயன்படுத்திக் கொள்ள முற்படுவாருக்கும் ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற கிரமத்தில் ஒவ்வொரு நோக்கத்தையும் எடுத்துச்செல்ல வேண்டியதிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் போதுமான உணவும், உடையும் கிடைத்தால் போதுமென்பதே சமயப்பற்றற்ற அவர்களின் முடிவாய்த் தெரிகிறது : விஞ்ஞான முன்றேற்றத்தால் இவ்விரு பிரச்னைகளும் சிரமமின்றியும் காலதாமதமின்றியும் அவர்களுக்குத் தீர்ந்தபின், பொழுது போக்குவது எப்படி? சும்மாயிருக்கவும் மாட்டார்களே ! சும்மாயிரு என்று நமது ஞானிகள் சொல்லுவதைக் கேலி செய்யத்தானே செய்வார்கள். அப்படிச் சும்மாயிருக்கும்பொழுது பிறக்கும் இயக்கத்தையே " அன்னமயமென்னும் கோசம்தானே, அந்தணர் முதல் புலையர் வரைக்கும் பின்னமறவே தோணுதே, ஒரு பேதம் எங்கும் காணேன் தன்னையறிகின்ற தாபமே பெரிதென்று " கவி கோபால கிருஷ்ண



பாரதியார் அழகாய்ச் சொல்லியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட ஞான மார்க்கத்தைக் குறிக்கும் அபிப்பிராயங்களை முதலில் பாமரர்களுக்கும் விஞ்ஞான அறிஞர்களுக்கும் விளக்கியபின் ஞானம் பெறச் சாதிக்க வேண்டிய யோகங்களைப் பற்றியும் அதற்கு வேண்டியவற்றைப் பற்றியும் எடுத்துச் சொல்லிச் சமீப காலத்தில் மேனாட்டில் நமது யோக முறைகளைத் தெரிந்துகொள்வதிலுள்ள அவாவைப்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறவற்றை நமக்கு அனுகூலமாக்கிக் கொண்டு, நவீனம், புரட்சி என்று மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் ஆர்வத்தோடு செல்லுபவர்களின் உக்கிரம் தணியப் போதுமான அளவு பிரசாரம் செய்த பிற்பாடு கிரியை, சரியை இவ்விரண்டைப் பற்றியும் மக்களிடம் பிரசாரம் செய்யலாம். ஆவலுடன் கேட்பார்கள். இவைகளுக்குச் சாதனமாகும் ஆகம நெறியும் அதை அடிப்படையாகக் கொண்ட சிற்பத்துடன் சித்திரக்கலையும் நான்கு மார்க்கமும் பற்ற அனுசரணையாய் இருக்கும். இசைக்கலையும் அதற்குரிய அர்த்தமும் மக்களுக்கு நாளுக்கு நாள் தெரியாமல் போய் மிகவும் கேவலமான மனப்பான்மையுடன் நோக்கப்பட்டு வருகின்றன. மக்கள் வாழ்க்கையின் இலக்கியங்களில் சமய உணர்ச்சி முதல் இடம் பெறுவதனால் ஞானத்தை எளிதில் - சீக்கிரத்தில்-பரப்ப இக்கலைகளே முக்கிய சாதனமாகும். மேலும் நமது தாய்மொழியாகிய தமிழுக்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து, தீவிரமான பிரசாரத்திற்குள்ளாகித் தமிழைப் புகழ்ந்து சமயத்தை இகழ்ந்து உள்ள தொடர்பைத் துண்டிப்பவர்களைக் கண்டிக்க வேண்டும்.

அந்நிய நாட்டு மொழிகளில் ஆண்டவன், மொழிக்காக நாடி வந்தானென்பது கிடையாது. " அழகுபெற்ற தமிழ் மொழிக்கு ஆசையாகி ஓர் புலவனை முன் வழிமறித்தும் எதிரிக்கும் வேடனான் " முருகன். சங்க காலத்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார் சிவபெருமான். தமிழ்ச் செய்யுள்களுக்குத் திருச்சிற்றம்பலவர் தாமே கையொப்பமிட்டிருக்கிறார். நாம் இன்று அனுபவிக்கச் சமுத்திரம்

போன்றிருக்கும் தமிழ் இலக்கியங்களுள் மாணிக்கங்களாய்க் கிடக்கும் செய்யுட் பக்தி ததும்பும் பாக்களே. ஈசன் கருணை சுரந்து மடை திறந்தால்தான் இவ்வரிய செய்யுட்கள் ஆயிரக் கணக்காகச் செய்ய முடியுமென்று இலக்கணம் படைத்த அறிஞர்கள் சொல்லுகிறார்கள். இப்படியிருக்கத் தமிழன் இயற்கையை மட்டும் வர்ணித்தான் என்பதற்கு எமக்குத் தெரிந்த சான்றுகளில்லை. சிலர் புறநானூறு முதலிய பழைய காப்பியங்களிலிருந்து இயற்கையை வர்ணிக்கும் பல பகுதிகளை அவர்கள் கூறுவதற்கு அத்தாட்சியாக, வேகமாய்ச் சொல்லிக் காட்டும்பொழுது பரிபாடல் போன்ற நூல்களை விளம்பரப் படுத்துவதில்லை. சமயத்தைத் திட்டுபவர்கள் தீய எண்ணத்துடன் எடுக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று. சிற்பமும் சித்திரமும் சரியை மார்க்கத்தில் இடம் பெற்று, நாம் சாதாரணமாய்க் கூறும் கோவில் திருப்பணிகளில் ஒன்றாய்ச் செய்யப்படுவன. அந்நிய நாட்டிலுள்ள பிற சமயத்தினரையும் இவைகளை நூதனமான காட்சியாய்ப் பார்க்கச் செய்து பின் இவைகள் மூலமே நமது உயர்ந்த தத்துவங்களை அவர்களுக்குத் தெளிவாக்க இருகலைகளும் ஹேதுவாகும். ஓர் அறிஞர் சிற்பத்தையும் சித்திரத்தையும் வெகு அழகாக "அசையாய் இசை" என்று சொல்லியிருக்கிறார். இவை சம்பந்தமாக டாக்டர் ஆனந்த குமாரசாமி போன்ற அறிஞர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டால் வெகு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் ஆரம்பித்திருக்கும் சிலை உடைத்துக் கலை அழிக்கும் தொழிலை நிறுத்தலாம். முன்னே சொன்னபடி நான்கு மார்க்கத்திலும் சம்பந்தப்படுகிற இசைக்கலையை, தெய்வ வழிபாட்டைத் தமக்கோ, மற்றவர்களுக்கோ நடத்தி வைக்கும் தனிப்பட்டவரோ, கூட்டத்தாரோ சரியான முறையில் கவனிக்காது வந்து கொண்டிருப்பது ஒரு பெருங் குறையாகும்.

இசையில் தேசிய சங்கீதம், மார்க்க சங்கீதம் என்ற இரண்டுள் பின்னுற் சொன்னது தேவாராதனைக்கும் ஞானப்



பெருக்கிற்கும் எடுக்கப்பட்டிருக்கிறது. இசை ஐம்புலன்களையும் வெல்ல சாதகமாயிருப்பதும் ஆலயங்களில் தெய்வ வழிபாடு நடக்கும்பொழுது தொன்றுதொட்டு வழக்கத்தில் வந்ததும் கர்ணபரம்பரையாய்க் கேட்டுவந்ததுமான பல ராகங்களை ஆராயாது, அவைகளின் சொரூபமே மாறிப் போய்விடும் போலிருக்கிறது. உதாரணமாக மார்கழி மாதத்திய பூஜையில் 'நடராஜா நடராஜா' என்று துவங்கும் பாடல்களின் ராகம்; இதேபோல் அருணகிரியார் செய்த திருப்புகழில் பதிந்துகிடக்கும் தாளங்களை ஆராய முன்வருபவர் ஒருவருமில்லை. பரிபாடலில் இயற்றமிழ் இலக்கணப்படியுள்ள செய்யுளுக்குத் தாளங்கள் உண்டாம். மிஞ்சி இருக்கும் தமிழிசை நூல் பகுதிகளில் ஆராய்ந்தால், இயல் தமிழில் உள்ள செய்யுட்கள், இலக்கணக் கட்டுப்பாடுகளுடன் எப்படி ஒலிக்கின்றனவோ அதேபிரகாரம் இன்று கீர்த்தனைவழியில் சாஹித்தியம் செய்யவோ அல்லது பழைய சாஹித்யங்களுக்குள்ள தாளங்களைச் சரிப்படுத்திக் கொள்ளவோ முடியும். இசைக்கலைக்குப் புதுப்பகுதி பகுதிகளாய்ச் சேர்க்க, இன்று நமக்குத் தெரியாமல் அளவுகடந்த அங்கங்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. இந்தவிதமான முயற்சியிலீடுபடாது ஈசனருள்பெற்று நாதத்தை உபாசித்த தியாகராஜர் முதலிய பெரியோர்களின் மெட்டுகளில் ராகபாவம் தெரியாது பல காரணத்தால் தமிழ் சாஹித்யங்களைக் கெடுத்து வருகிறார்கள். இவ்வீண் முயற்சி தமிழரின் ஆராயுந்தன்மைக்குப் புகழைக் கொடுப்பதாகாது. சமய வளர்ச்சியில் தேசிய சங்கீதத்துக்கும் இடமில்லாமல் போகவில்லை. தென்பாங்குகளைப் பெரும்பாலும் செஞ்சுருட்டி ராகத்தில் பாடப்பட்டு வருகின்றது. முருகனுக்கு எடுக்கும் காவடியில் பாடும் சிந்துகளில் பல ராகங்களுள. இவைகளில் சில ராகங்களையும் மார்க்க சங்கீதத்தில் உள்ள சில ராகங்களையும் நமது முன்னோர்கள் பதங்களுக்கு எடுத்துள்ளார்கள். பதங்களைப் பாடுவதைக்காட்டிலும் பாடி ஆடுவது இன்னும் சிறந்ததோர் கலையின் அம்சமாகும். நாயகி நாயக பாவம் அதாவது தலைவனுக்கும், தலைவிக்கும் ஏற்படும்

பான்மை. இதைக் குறிக்கும் கலையை நமது ஆலயங்களில் காட்டாதவண்ணம் அரசாங்கத்தார் தடை செய்திருக்கிறார்கள். காமத்தை மூட்டும் கலை என்கிறார்கள்போலும்! தில்லையிலுள்ள அம்மனுக்குச் சிவகாமி என்ற பெயரை ஏன் அனுமதித்துள்ளார்கள். மாணிக்கவாசகரின் திருக்கோவையாருக்குத் தடை எதுவும் உண்டோ? மேல்நாட்டில் நாட்டியம் என்பது ஐம்புலன்களிலும் உணர்ச்சியை எழுப்பும் - மன்மதாராதனை - காமனைப் போற்றும் களியாட்டமாகும்! ஆனால் நமது நாட்டியத்திற்கு ஏற்பட்ட தலைவனும், தலைவியும் அக்காமனை எரித்தவனும் கன்னியாயிருந்தும் அகில அண்டங்களுக்கும் ஞானப்பால் ஊட்டும் பராசக்தியும் ஆவர். இச்சக்தி மூலம் மணிவாசகர் போன்ற பக்தன் ஞானமார்க்கமாய் இறையொடு இரண்டறக்கலக்கும் உண்மையை குறிப்பதும், ஆங்கிலத்தில் Sin and Bliss Divine என்று மட்டும் பொருளில்லாத அளவிற்குச் சொல்லக்கூடிய வார்த்தைகளை, நமது முன்னோர்கள் இன்பத்தின் பிரிவாகப் பேரின்பம், சிற்றின்பம் என்ற ரகசியமான தத்துவத்தை வெளிப்படுத்துவதும் தமிழ்மறை அருளிய வள்ளுவர் 'வீட்டை'ச் சொல்லாமல் கடைசியாகச்சொன்ன காமத்துப்பாலை உணர்த்துவதுமான நாட்டியமாகிய தெய்வீகக்கலையை நமது கோவில்களிலிருந்து விரட்டல் எங்களைப்போன்ற சிற்றறிவுள்ளவர்கள் வருந்தத்தக்கது. இது சம்மந்தமான சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதுடன் மற்றும் எங்கள் எளிய அபிப்பிராயங்களை ஆராய்ந்து எல்லாரும் மெச்சும் அளவில் உயர்ந்ததாகச் செய்து திட்டங்களை வகுக்க வேண்டுமாறு சமாஜத்தை வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜனநாயகமுறை வழங்கும் இக்காலத்தில் பீடாதிபதிகள் மூலமும், மடாதிபதிகள் மூலமும் இவைகளைக்கொண்டு செலுத்துவது உசிதமல்ல என்பதற்காவும், மடாதிபதிகள் தனிப்பட்ட ஹோதாவில் எந்த முயற்சி எடுத்தாலும் அவர்கள் சுயநலத்தை நோக்கிச் செய்கிறார்கள் என்று வீணாய் சமயப்பற்றற்றவர்கள் அவர்கள் மேல் பழிசுமத்தாதிருக்கும் பொருட்டும் சங்கத்தின் மூலம்தான் மேற்கண்டவைகள்



சாத்தியமென்னும் காரணத்தால் நாங்கள் சமாஜத்தை அணுகுகிறோம். சமாஜம் தங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத ஒத்துழைப்பைக் கொடுக்கக்கூடிய மடங்களையும் ஆலயங்களையும் அதைச்சேர்ந்தவர்களையும், தனிப்பட்ட உருமாறாமல் இருக்கும்படி சகல ஏற்பாடுகளையும் செய்யவும் எந்த மதச்சார்புள்ள அரசியற் கட்சியிற் சேர்ந்தவரானாலும்சரி, அதற்ற கட்சியானாலும் சரி, சமய சம்பந்தமாகக் கலக்க விரும்பினால் அவர்களின் சந்தேகங்களைத் தட்டுத் தடுமாற்றமின்றித் தீர்க்கவேண்டுமாயும் சமாஜத்தைப் பரிவோடு கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்வருட விழாவை இப்பகுதியில் நடத்தி எங்களைக் கௌரவிக்கத் தீர்மானித்ததற்கும் ('தாயுமானார் தத்துவம்', முற்காலத்திய பெண்டிர் கல்வி') போன்ற அரிய பிரசங்கத்தைச் செய்து சமயப்பற்றைஎழுப்பி சைவத்தைப் பரப்பும் சமாஜத்தினர்க்கும், அன்னார்கட்கு இந்த உன்னத வரவேற்பளிக்கக் கூடிய சகலவித சாதனங்களும் செய்து கொடுத்துதவிய கனம் சேதுபதி அவர்களுக்கும், சிவகங்கை ராஜா, சேத்தூர் ஜமீன்தார், மடாதிபதிகள்போன்ற போஷகர்களுக்கும் இங்குக் குழுமியிருக்கும் எல்லோருக்கும் என்றும் மறவாத நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நல்வரவு கூறுகிறேன்.

இராமநாதபுரம், 30—12—50.

ராஜகுமார் R. காசிநாததுரை
வரவேற்புக்கழகத் தலைவர்

# வாழ்த்துப்பா*

திங்களு மரவும் கொங்கலர் கொன்றையும்
கங்கையு மலிசடை மங்கையோர் பாகன்
அருள்வழி நின்ற தெருள்வரு நலஞ்சால்
சமய குரவர்சந் தான குரவர்
நனிவரு சிறப்பில் தனித்தொகை யடியார்
ஆதிமெய் யன்பர் மேதினி வாழச்
செந்தமிழ் நிலத்து முந்துறப் பேணி
மறைவழி காட்டிய முறைகெழு சைவ
நெறியினைப் போற்றிய அறிவுடைச் செல்வர்
பண்டும் இன்றும் பலரால் என்றும்
அன்னோர் தம்முள் முன்னோ ராமெனும்
தேசான் மலிசிவ பூசா துரந்தரர்
தேவைப் பதியமர் தேவைத் தொழுகுலச்
சேதுக் கதிபர் செழுமர புதித்தோன்
நாக நாதசண் முகரா சேச்சுரன்
பேரா தரவிற் சீரா ரவளகம்
பொலிவுற விளங்க மலிமுக வைக்கண்
ஏற்புற வெடுத்த நாற்பா னைந்தாம்
சைவமா நாட்டின் தலைவா வருக !
சிவநெறி பேணும் செல்வா வருக !
தீந்தமிழ்ச் சுவைகாண் செம்மால் வருக !

*இராமநாதபுரத்தில் நடைபெற்ற 45-வது சைவர் மாநாட்டின் தலைவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக ரெஜிஸ்ட்ரார் உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கட்கு (30—12—50) வரவேற்புக் கழகத்தாரால் அன்புடன் வாசித்தளித்தது.



மல்குமண் ணாமலைப் பல்கலைக் கழகத்துக்
கருமத் தியல்கெழு பெரும வருக !
சச்சிதா னந்தம் பிள்ளையென் றிச்சகம்
மெச்சும் பெயர்புனை மேலோய் வருக !
நின்னால் நலமுறும் இந்நாள் நன்னாள்
ஆமென மகிழ்ந்தே யாமும் போற்றுதும்
பாவார் சைவம் பரவி யோங்க
நீவா ழியரோ நெடியதென
மூவா முழுமுதல் முன்னுது முவந்தே.

# அவையினரை வரவேற்றல்*

செந்தேன் பெருக்கும் செழுங்கொன்றை வேணியரன்
சேப்பவழி வழிசிறந்து
திகழ்செந் தமிழ்ச்செல்வி செங்கோல் செலுத்திவரு
தென்னாடு தன்னிலின்பம்
தந்தேர் கொழித்துத் தழைத்தசென் னைச்சைவ
சமாசத்து நாற்பதின்மேல்
சாருமைந் தானநன் மாநாடு தொன்மரபு
தன்னில்வரு மன்னர் துங்கன்
முந்தே தொடுத்துத் தமிழ்ச்சங்க முடன்சைவ
முதலான யாவுமேந்தும்
முகவை நகராதிபர்கு லாதிபன் நங்கள்சண்
முகராசன் ராசர் திலகன்
நந்தேவை இறைநாம மண்டபத் தேயவன்
நற்றுணையி னாலெடுத்த
நல்விழாப் பொலிவெய்த வெல்லீரும் வருகயாம்
நல்வரவு கூறமாதோ.

*இராமநாதபுரம் 45-வது சைவர் மாநாட்டில் (30-12-50) வரவேற்புக் கழகத்தாரால் வாசித்தளிக்கப்பட்டது.

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 45-ம் ஆண்டு அறிக்கை

இச் சமாஜம், 1905-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப்பெற்றது. பத்து ஆண்டுகளுக்குப் பின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது.

இச் சமாஜத்தின் நோக்கம் சைவ சமயத்தைப் பரவச் செய்து, தமிழ்மொழியை வளரச் செய்வதேயாம். இந் நோக்கம் முற்றுப்பெறுதற்குப் பலமுறைகள் கையாளப் பட்டு வருகின்றன. அவற்றுள் சில :—

1. பத்திரிகை வெளியிடல்
2. நூல்களை அச்சிட்டுப் அடக்கவிலைக்கு வழங்கல்
3. கூட்டங்களை நடத்தல்
4. பிரசாரம்.

1. பத்திரிகை : 'சித்தாந்தம்' என்னும் திங்கள் வெளியீடு 34 ஆண்டுகளாக சமாஜ அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ் வெளியீடு 48 பக்கங்களை உடையது. ஆண்டு ஆரம்பத்தில் சமாஜ அங்கத்தினரின் தொகை 722. ஆண்டுமுடிவில் 687.

2. நூல்கள் வெளியீடு : சைவத் திருமுறைகளும், சித்தாந்த சாத்திர நூல்களும், பிறசமய நூல்களும், தமிழ் இலக்கிய நூல்களும். இதுவரை வெளிவந்த பிரதிகள் 94000. இந்த ஆண்டில் பெரிய புராணமும், நாலாயிர திவ்விய பிரபந்தமும் வெளிவந்தன.



இவையெல்லாம் அடக்கவிலைப் பதிப்புக்களே. இவைகளைத் தவிர சிறு நூல்கள் பல இனமாக வழங்கப்பட்டு வருகின்றன.

3. கூட்டங்கள் :—இவ்வாண்டு கொழும்பில் 1950-ஜனவரியில் 44-வது மகாநாடு கூடிற்று.

நிர்வாகக் கூட்டம் :- சமாஜ நிர்வாகக்கூட்டம் ஒன்றும் பொதுக்கூட்டங்கள் மூன்றும் நடைபெற்றன.

கோடை சித்தாந்த வகுப்பு :- கோயம்புத்தூரில் மே மாதத்தில் 12 நாட்கள் சித்தாந்த வகுப்பு நடந்தது. சிவஞானபோதம் 12 சூத்திரங்களையும் உயர்திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் பாடஞ் சொன்னார்கள்.

சைவத் தேர்வுகள் :- சில காரணங்களால் வழக்கம் போல் இந்த ஆண்டு சைவத்தேர்வு நடைபெறவில்லை. அடுத்த ஆண்டு நடைபெறும்.

கணக்கு :—45-ம் ஆண்டு (1 - 12 - 1949 முதல் 30 - 11 - 1950 வரை) வரவு செலவு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு.

ஆண்டு இறுதியில் இந்தியன் பாங்கியில் கணக்குப்படி கையிருப்பு ரூ. 3042-10-10. இதில் ஞானியார் நினைவு நிதி ரூ. 802 - 2 - 6 ம் சேர்ந்திருக்கிறது.

நன்றி :- இந்த ஆண்டு சமாஜத் தொண்டில் கலந்து கொண்ட எல்லா அன்பர்களுக்கும் சமாஜம் நன்றிபாராட்டுகிறது. அங்கத்தவர் எண் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் முப்பத்தைந்து குறைந்துவிட்டது. எனவே அங்கத்தினர் ஒவ்வொருவரும் குறைந்தது ஒவ்வோர் புது அங்கத்தினரையாவது சேர்த்துத்தர வேண்டப்படுகின்றனர்.

| வரவு | ரூ. | அ. | பை | செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| சென்ற ஆண்டு இருப்பு | 52 | 15 | 6 | காகிதம் | 800 | 0 | 0 |
| புத்தக விற்பனை | 359 | 12 | 0 | அச்சுக்கூலி | 3318 | 0 | 9 |
| 44-வது மகாநாட்டுக்குக் காகிதம் தந்த வகையில் வரவு | 124 | 13 | 6 | பாங்கில் கட்டினது | 719 | 3 | 3 |
| மூன்றூல் பதிப்புக்காக திருவெண்ணெய்நல்லூர் திரு. பு. சின்னசாமி செட்டியார் தந்த முதல் | 150 | 0 | 0 | தபால் செலவு | 306 | 8 | 6 |
| பாங்க் வட்டி வரவு | 113 | 7 | 3 | சில்லரை வகை | 82 | 13 | 0 |
| பாங்கில் வாங்கியது | 2955 | 0 | 0 | கவர், காகிதம் முதலியன | 8 | 7 | 0 |
| சந்தா வரவு | 1744 | 9 | 0 | பிளாக், பிரேம் முதலியன | 34 | 1 | 0 |
| | | | | புத்தக விற்பனைக்காக துணைச் செயலாளரிடம் இருப்பு | 200 | 0 | 0 |
| | | | | ஆண்டு முடிவில் கையிருப்பு | 31 | 7 | 9 |
| | 5500 | 9 | 3 | | 5500 | 9 | 3 |

# சமாஜ ஆண்டு விழா

(G. கலியாணம் M. A., D. Econ.)

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 45-ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடும் 30-12-50, 31-12-50, 1-1-51 இந்த மூன்று நாட்களில் இராமநாதபுரத்தில் சேதுபதி மன்னர் அவர்களின் அரண்மனையிலுள்ள இராமலிங்க விலாச மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. அண்ணாமலைப் பல்கலைக் கழக ரெஜிஸ்ட்ரார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். 31-12-50-ல் சைவ மங்கையர் மாநாடு, சென்னை லேடி வெலிங்டன் பெண்கள் ஆசிரியக் கல்லூரித் தமிழ்ப்போசிரியர் திருமதி. இராஜாத்தின அம்மையார் அவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மாநாடு, குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சின்னப்பட்டம் உயர்திரு. தெய்வசிகாமணி அருணசலதேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றன.

முதல் நாள் (30-12-50) காலை 8 மணிக்கு எல்லோரும் சேர்ந்து சிவபுராணம் பாடிக்கொண்டு இராமலிங்க விலாசத்திலிருந்து சிவாலயத்திற்குச் சென்றனர். ஆலய வழிபாடு நடைபெற்றது. அம்பிகை சந்நிதியில் துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள இயற்றிய "திருமூலர் திருமந்திர ஆலய விளக்கம்" என்ற நூல் வெளியிடப்பட்டது. "சித்தாந்தம்" பத்திராசிரியர் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் அந்த நூலைப்பற்றிப் பேசினார்கள். நூற்பிரதிகள் அங்கு வந்திருந்தோர் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. பிறகு மாநாட்டுத் தலைவர்கள் யானை முதலிய விருதுகளுடனும், மேளவாத்தியங்களுடனும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அரண்மனையிலுள்ள இராஜேஸ்வரி தேவி கோவிலில் வழிபாடாற்றிய பின் கூட்டம் கலைந்தது.

அன்று பிற்பகல் 2-மணிக்கு மாநாடு தொடங்கியது. திரு. ஆவுடையப்ப பிள்ளை கடவுள் வாழ்த்துப் பாடினார்.

அவைத் தலைவர் தலைமை யேற்றபின், இராஜகுமார் திரு. காசிநாததுரையவர்கள் தம் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் திரு. A. உக்தண்டராம பிள்ளையவர்கள் திறப்புப் பேருரையை ஆற்றினார்கள். திரு. கலியாணசுந்தரம், அவைத்தலைவர்க்கும், அவையினருக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்தார். உயர் திருவாளர்களான மறைமலையடிகள், சாதுசுவாமிகள், இரமண சுவாமிகள், அரவிந்தர், சர்தார் படேல் இவர்களின் மறைவைப்பற்றித் தலைவர் அவர்கள் பேசியபின் எல்லோரும் எழுந்து அமைதியாக நின்று வணக்கம் செலுத்தினர். சமாஜ அமைச்சர் திரு. K. அரங்கசாமி முதலியார் அவர்கள் சமாஜ ஆண்டு அறிக்கையையும், வரவு செலவு கணக்குகளையும் வாசித்தார்கள். தலைவர், அவர்கள் தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள் (25ம் பக்கத்தில் காண்க). பின்னர் கீழ்க்காணும் சொற்பொழிவுகள் நடந்தன :—

1. "திருமூலர் திருமந்திரமும், மெய்கண்டார் சிவஞான போதமும்"—திருமந்திரமணி துடிசை கிழார் திரு. அ. சிதம்பரனார்.
2. "நாதந்த நடனம்"—திரு. A. முத்துசிவம், M. A.

தலைவர் தம் கருத்துரை நிகழ்த்தியபின் கடவுள் வாழ்த்துடன் இரவு $8\frac{1}{2}$மணிக்கு முதல்நாள் கூட்டம் இனிது நிறைவேறியது.

இரண்டாம் நாள் (31-12-50) அதிகாலை 4-30 மணிக்கு, சமாஜ அங்கத்தினர்களும், மற்றும் வெளியூரிலிருந்துவந்த அன்பர்களும் தேவிப்பட்டினம் (நவபாஷாணம்), சேதுக்கரை, திருப்புல்லணை (தர்ப்பசயனம்) முதலிய இடங்களுக்குச் சென்று கடல் நீராடியும், பெருமானைச் சேவித்தும் திரும்பி வந்தார்கள். பிறகு காலை 8 மணிக்கு, சமாஜ அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; சில தீர்மானங்கள் நிறைவேறின.



அன்று 10 மணிக்குச் சைவ மங்கையர் மாநாடு தொடங்கியது. கடவுள் வணக்கத்தின் பின், ஆதாரக்கல்வி பயிற்சிப் பள்ளி ஆசிரியர் திருமதி. ஆனந்தவல்லியம்மையார் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். வரவேற்புப்பா வாசித்தளிக்கப்பட்டது. மாநாட்டுத் தலைவியர் திருமதி. இராஜரத்தினம் அம்மையார் தமது தலைமைப் பேருரையை ஆற்றினார்கள். (1—16 வரையுள்ள கடைசிப்பகுதியிற் காண்க.) பிறகு கீழ்க்காணும் சொற்பொழிவுகள் நடைபெற்றன :—

1. "முற்காலப் பெண்டிர் கல்வி"—திருமதி. சிவராம சீதாபாய் அம்மையார்.
2. "குமர குருபரர்"— திருமதி. சிவகாமசுந்தரியம்மையார்
3. "சமயப் பரப்பில் பெண்கள் பங்கு"— திருமதி இராஜேஸ்வரி யம்மையார்.

தலைவியர் முடிவுரையுடன் சைவ மங்கையர் மாநாடு பகல் ஒரு மணிக்கு இனிது முடிந்தது.

மாலை 3-30 மணிக்கு, சைவ இளைஞர் மாநாடு ஆரம்பித்தது. கடவுள் வணக்கத்தின் பின் தலைவருக்கு வரவேற்புப் பா வாசித்தளிக்கப்பட்டது. உயர்திரு. தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையேற்று பேருரை நிகழ்த்தினார்கள். பிறகு சுவாமிகளுக்காக திரு. G. கலியாணம் அவர்கள் அடுத்த ஆண்டு சைவர் மாநாட்டை குன்றக்குடியில் நடத்துவதாக அழைத்தார்கள். கீழ்க்காணும் சொற்பொழிவுகள் நடந்தன :—

1. "தாயுமானார் தத்துவம்"—வித்துவான் திரு. சேது இரகுநாதன், B. O. L.
2. "நால்வரும் இராமலிங்கரும்"—வித்துவான் திரு. அ. இராஜகோட்டியப்பன்.
3. "கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தம்"—திரு. மு. ஐயாமணிக் குருக்கள்.
4. "இளைஞர்க்கான இன்னுரை"—திரு. A. முத்துசிவம், M.A.

தலைவர் சுவாமிகள் தங்கள் பொருள் பொதிந்த முடிவுரையைக் கூறினார்கள். கடவுள்வாழ்த்துடன் இளைஞர்

மாநாடு இரவு 9 மணிக்கு இனிது நிறைவேறியது. சண்முக விலாச மாளிகையில் இரவு 10 மணிக்குச் சுவாமிகளும், சமாஜத் தலைவரும் தொண்டர்படைக்குத் "தொண்டு" என்னும் பொருள் பற்றி எடுத்துரைத்தார்கள். உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. இராஜா அய்யர் அவர்கள் இருவருக்கும் நன்றி கூறியதுடன் தொண்டர்படையினை அடுத்த ஆண்டு குன்றக்குடியில் நடைபெறப்போகும் சமாஜ மாநாட்டிற்குத் தொண்டு செய்ய அனுப்புவதாகவும் வாக்களித்தார்கள்.

மூன்றாம் நாள் (1-1-51) காலை 5 மணிக்கு வெளியூர் அன்பர்கள் எல்லோரும் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மோட்டார்வண்டி மூலம் திரு உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச் சென்று இறைவழிபாடு செய்தார்கள். திரும்பிவந்து இராமநாதபுரத்தில் தாயுமானப் பெருந்தகையின் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றினர். பின்னர் இராமலிங்க விலாசத்தில் சைவர் மாநாடு தொடங்கியது. முதல் நாள் நடந்த இரண்டு சொற்பொழிவுகளுக்கும் தலைவர் தம்முடைய கருத்துரையைப் பகர்ந்தார்கள். கீழ்க்காணும் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன :—

1. "கல்வி நிலையங்களில் சமயபோதனை"—திரு. R. பஞ்சநதம் பிள்ளை
2. "திருக்குறளும், சமயமும்"—வித்துவான் திரு. மொ. அ. துரைஅரங்கனார், M. O. L.
3. "தேவாரத்தில் நகைச்சுவை"— வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார்.

தலைவர் முடிவுரை கூறித் தாம் தவிர்க்கமுடியாத அலுவலின் காரணமாக சிதம்பரம் போகவேண்டியதைத் தெரிவித்துக் கூட்டத்தினரிடம் விடைபெற்றுக் கொண்டனர். திரு. இராஜா அய்யர் அவர்கள் தலைவருக்கு நன்றி கூறினார்கள். இத்துடன் மூன்றாம்நாட் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

பிற்பகல் 3-30மணிக்குத் தலைவர், சொற்பொழிவாளர்கள், வரவேற்புக் கழகத்தினர் முதலியவர்களைப் புகைப்



படம் எடுக்கப்பட்டது. 4 மணிக்கு மாநாடு "சித்தாந்தம்" பத்திராசிரியர் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L. அவர்கள் தலைமையில் கூடியது. கடவுள் வணக்கத்தின் பின் தலைவர் முன்னுரை கூறினார்கள். கீழ்க்காணும் சொற்பொழிவுகள் நடைபெற்றன :—

1. "உந்தியுங் களிறும்"—வித்துவான் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.
2. "சமய ஒப்பியல்"—திரு. T. S. கந்தசாமி முதலியார், M. A.
3. "வள்ளுவர் கண்ட சமயம்"—திரு. தியாகராஜன், M. A., B. T.
4. "திருவெம்பாவை" —வித்துவான் - திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

வருகிற மே மாதத்தில் கோடை சித்தாந்த வகுப்பை திருப்பத்தூரில் நடத்தித் தருவதாகக் கீழ்க்காணும் அன்பர்கள் அழைத்தார்கள். தலைவர் அதைக் கூட்டத்தினருக்குத் தெரிவித்தார்கள் :—

திருவாளர்கள் சொ. நாராயணன் செட்டியார் - முத்துப்பட்டனம் (காரைக்குடி), முப. இராமநாதன் செட்டியார் - நெற்குப்பை, நா. இராமநாதன் செட்டியார் - N. புதூர், இராம. இலட்சுமணன் செட்டியார்-கண்டனூர், AL. AR. சுப்பையா செட்டியார் - தேவகோட்டை, சித. தே. பழனியப்ப செட்டியார் - கோட்டையூர், அழகப்ப அண்ணாமலை-கோட்டையூர், AR. MA. இராமசாமி செட்டியார்-கோட்டையூர்.

தலைவர் முடிவுரை கூறினார்கள். சமாஜ அமைச்சர் திரு. அரங்கசாமி முதலியார் அவர்கள் மாநாட்டுத் தலைவர்களுக்கும், சொற்பொழிவாளர்கட்கும், திறப்பாளருக்கும், வரவேற்புக்கழகத்தினருக்கும், தேவார ஓதுவாருக்கும் நன்றி கூறினார்கள்; சிறப்பாக சேதுபதி மன்னரும், அவர்களின் சகோதரர்களும் செய்த பேருதவிகளைப் புகழ்ந்து பாராட்டினார்கள். பின்னர் வரவேற்புக்கழகத்தின் சார்பாக

திரு. இராஜா அய்யர் அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்கள். இரவு 10 மணிக்கு மாநாடு இனிது முடிந்தது.

மாநாடு வெகு வெற்றிகரமாக நடந்தேறியதைப்பற்றி அன்பர்கள் பலபடப் பாராட்டிப் பேசினார்கள். இராமலிங்க விலாச மண்டபத்தை மின்சார விளக்குகளுடன் ஒலிபெருக்கிகள் அமைத்து அலங்கரித்த சேதுபதிகளின் இளவல் திரு. மங்களநாததுரையைப் புகழ்வதா? அவருக்கு உறுதுணையாய் நின்ற அவர்களின் சகோதரர்கள் திரு. விஜயநாததுரை, திரு. சிதம்பரநாததுரை இவர்களைப் போற்றுவதா? ஒவ்வொரு இரயில் வண்டிக்கும் வந்து அன்பர்களை அழைத்துச் சென்று தங்க வசதிகள் செய்துவைத்த சாரணப் படையினரின் தந்நலமற்ற தொண்டை மெச்சுவதா? அறுசுவையோடு உணவளித்து விருந்தோம்பலைச் செய்த திரு. அரிஹரமய்யரின் அமைதியான செயலை இயம்புவதா? அஞ்சல் நிலையம், விசாரணை இடம் இவைகளில் இருந்து அருந்துணை புரிந்த ஆசிரியர்களின் சேவையைப் பற்றிக் கூறுவதா? வரவேற்பு அமைச்சர்களான திருவாளர்கள் N. பாலசுப்பிரமணியபிள்ளை, இராஜா அய்யர், A. M. இராமமூர்த்தி இம்மூவரும் செய்த ஏற்பாடுகளை நினைத்து மகிழ்வதா? மோட்டார்கார்கள், வண்டிகள், உணவு, உறைவிடம் முதலியன அரண்மனைக்குள்ளேயே ஏற்பாடு செய்து விழா வெற்றிகரமாக நடந்தேற பேருதவிபுரிந்த சேதுபதிகளையும், அவைகளை ஒழுங்காய் நடத்தி முடித்த இராஜகுமார் திரு. காசிநாததுரை அவர்களையும் போற்றிப் புகழ்வதா? எதைப் பற்றித்தான் கூற இயலும்! 'அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்றபடி எல்லோருக்கும் நன்றி கூறுவது இயல்புடைத்தன்றோ! இராமலிங்க விலாசம் சிவலோகமாகக் காட்சியளித்ததை நினைக்க உள்ளம் இறும்பூதெய்துகிறது.

சைவம் ஓங்குக! தமிழ் வெல்க!

---

# ஆசியுரை *

ஞாலமுய்ய, நாமுய்ய, சைவ நன்னெறியின் சீலமுய்ய, அருட்பணிகள் பலவற்றைச் செய்துவரும் சமாஜத்தின் ஆண்டுவிழா இனிதே நிறைவெய்துக. சைவத் திருநெறியினை மக்களிடையே பரப்பி, அவர்களை அறப் பெருஞ் செல்வர்களாகவும் அருட்பெருஞ் செல்வர்களாகவும் ஆக்கும் சமாஜத்தின் பணிகள் வளர்ந்து, வளம் பல நல்க, நமது அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

*அன்றன்று மூன்னூற் றறுபத்து முச்சமயத்*
*தொன்றன்று வெவ்வே றுளமுத்தி—நன்றென்ற*
*சித்தாந்த மாமருணைத் தேவ சிகாமணிசெய்*
*சுத்தாத்து வைதச் சுகம்.*

---

## செய்தித் திரட்டு

(a) நாளது மாதத்தில் பல கூட்டங்கள் கூடின. அவைகளில் சமயக் கூட்டங்கள் மிகுதி.

(1) கிழக்கே கும்பகோணத்தில் சங்கர மடத்து ஆதரவில் திருப்பாவை, திருவெம்பாவைகளைப் பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தேவாரம் பிரபந்தம் இவற்றின் பெருமைகள் விளக்கப்பட்டன. சந்நிதானம் ஆலய நிர்மாணத்தைப் பற்றி உருக்கமாய்ப் பேசினார்கள்.

(2) வடக்கே வேங்கடகிரியில் 'திவ்விய வாழ்க்கை மாநாடு' நடைபெற்றது. பல அரிய பேச்சுக்கள் நிகழ்ந்தன.

(3) மேற்கே வற்கலையில் நாராயண குரு சங்கத்தில் ஒரு பெரிய விழா நடைபெற்றது. அரிய சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

---

* திருக்கயிலாய பரம்பரை திருவண்ணாமலை ஆதீனம் 44-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகளவர்கள் இராமநாதபுரத்தில் (30—12—50) நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழாவில் அருளியது.

(4) தெற்கே தென்காசியில் திருவள்ளுவர் கழக நிலையத்தில் சைவத்தமிழ் மாநாடு திருவாவடுதுறை மகா சன்னிதானத்தின் ஆதரவில் நடைபெற்றது. பல சைவ அறிவுப் பேச்சுகள் நிகழ்த்தப்பட்டன.

(5) பவானி திருமுறைக் கழகத்தின் 10-ம் ஆண்டு விழா மூன்று நாட்கள் நடந்தன. ஓமந்தூர், தொண்டைமான், கிருபானந்தவாரி முதலிய பெரியார்களின் தலைமையில் பல பெரியோர்கள் சமயப் பேச்சுக்களை நிகழ்த்தினார்கள்.

(b) பாரத நாட்டு உதவி முதல் அமைச்சர் வல்லபாய் படேல் அவர்கள் காலம் சென்றது நாட்டிற்கும் சமயத்திற்கும் பெரும் துயர் அளிக்கின்றது. அப்பெரியார் செய்த பெருந்தொண்டு சோமநாதர் ஆலயத்திருப்பணி ஆகும். பத்து நூற்றாண்டுகளின்போது நெறியற்றோரால் தகர்க்கப்பெற்ற அதனை அவர்களிடம் மீட்டு அதனை முன்னிருந்தபடி கட்ட ஆணையிட்டார்கள். அது 12 சோதிர் லிங்கங்களில் ஒன்றாகும் என்பதைச் சைவர்கள் அறிந்து போற்ற வேண்டும்.

---

## பெங்களூர் பெரியார் பிரிவு

நமது சமாஜ போஷகரில் ஒருவரும், சமாஜ விசேஷ மாநாடு ஒன்றை 1938ஆம் திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில் மிக அரிய முறையில் நடத்தி வைத்தவரும், பெங்களூர் கணபதி விலாச சபையைப் பல ஆண்டுகளாக நடத்தி வந்தவருமாகிய திரு. ஆ. அ. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் 27—12—50-ல் முருகன் திருவடி நீழலடைந்த செய்தியை மிக வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். இவருடைய வாழ்க்கைக் குறிப்பு முதலியன அடுத்த இதழில் வெளிவரும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜம்

நாற்பத்து ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா

சைவர் மாநாடு, இராமநாதபுரம்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள்,

**30-12-1950**-ல் நிகழ்த்திய

# தலைமைப் பேருரை

திருச்சிற்றம்பலம்

186872

“ உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்,
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன்; அம்பலத் தாடுவான்,
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் ”

“ பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி;
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி;
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி ”

சிவநேசச் செல்வர்களே,

அனைவர்க்கும் அன்பார்ந்த வணக்கம். சைவ சித்தாந்த மகா சமாஜத்து அன்பர்கள் தமியேனுக்கிட்டதொரு பணியைச் செய்ய இப் பேரவை முன் நிற்கின்றேன். மகிழ்ச்சியும், நன்றியும், அச்சமும் உள்ளத்தெழுகின்றன. திருமிகு சேதுபதி மகாராஜா அவர்கள் அரண்மனையிலுள்ள இச்சீர் சான்ற மண்டபத்தில், அவர்கள் பிரதிநிதிகளாய் விஜயம் செய்துள்ள அவர்கள் துணைவர்களையும், தகுதியான் மிக்க மற்றும் பல பெருமக்களையும் ஒருங்கே கண்டு வணங்கும் பேறு பெற்றமைக்கு மகிழ்கின்றேன். வலிய ஈத்தெனக்கிப்பதவியை நல்கி யாட்கொண்ட அன்பார்ந்த அறிஞர்கட்கு என் உளமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இப் பேரவையின் பெருமையினையும், அடி-

யேன் சிறுமையினையும் உணர்கின்றேன்; அச்சம் எழுகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், சுவாமி விபுலானந்தர், ஸர். பொ. இராமநாதனவர்கள், ஸர். அ. கனகசபை அவர்கள், அம்பலவாண நாவலரவர்கள், 40 ஆண்டுகட்கு முன் இங்கே இத்தகைய பெரிய கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஸர் P. புட்டண்ண செட்டியாரவர்கள் போன்ற பல பேரறிஞர்கள் சென்ற ஆண்டுகளில் தாங்கியதோர் தலைமையை வெறுந் துரும்பனையேன் வகிப்பது எப்படி என்னுமுணர்வு தோன்றுகின்றது. "அறமுரைத் தானும் புலவன்; முப்பாலின் திறமுறைத் தானும் புலவன்; குறுமுனி தானும் புலவன்; தரணி பொறுக்குமோ யானும் புலவனெனின்?" என்ற பொய்யாமொழிப் புலவர் செய்யுள் நினைவிற்கு வருகின்றது. ஆயினும், இங்கென்னை இழுத்து வந்து நிறுத்திவைத் திருப்பது அம்பலத்தெம் பிரான் ஆணையே என்பதை உன்ன, அச்சம் சிறிது தவிர்கிறது. 'என் செயலால் ஆவது ஏதொன்றுமில்லை' என்றுணர்கின்றேன். எனவே, "எழுத்துப்போலியும் எழுத்தென ஆளுவர் அதுபோல்" எனத் தொடங்கும் காஞ்சிப் புராண அவையடக்கச் செய்யுள் குறிக்கும் நீதியின்படி என்பால் அன்புடைய பெருமக்களாகிய நீங்கள், என் பேச்சுப் போலியையும் அன்புடன் கைக்கொண்டருளுவீர்கள் என்று நம்பி, எனக்கிட்ட பணியை ஒல்லும் வகையால் செய்ய இனி முயலக் கடவேன். நன்மையும் இனிமையும் பொருந்திய உண்மை மொழிகளை இந் நாயினேனும் ஏனைபேச்சாளர்களும் மொழிய இராமநாதப் பெருமான் அருள் புரிவானாக.

அன்பர்களே,

இம்மாநாட்டின்முன் யான் விண்ணப்பிக்க விரும்பும் கருத்துக்களை எடுத்துரைக்கத் தலைப்படுமுன், நம்மை இங்கொருங்கு கூட்டிய சேதுமன்னரவர்கள் மரபின் சிறப்பைப் பற்றி ஒரு சிறிது நினைவுகூர்தல் கடமையென உணர்கின்றேன். இராமநாதபுரம் எனுமிப் பெரும்பதி, திருவிராமேச்சுரம், திருவுத்தரகோச மங்கை, திருப்புல்லாணி முதலிய பல திருத்தலங்கள் தன்னைச் சூழப்பெற்றுள்ளது. அன்றி



யும் வேதாந்த சித்தாந்த சமரச நன்னெறியை இனிது விளக்கிய சிவானுபூதிப் பெருங் குரவராகிய தாயுமான சுவாமிகள் முத்தியடைந்த தலமாகவுமுள்ளது. இதனைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட சேது மன்னர்கள் மாட்சி பெரிது.* எண்ணிலாத நெடுங்காலமாக, சேதுராமேச்சுவர யாத்திரிகர்கட்குப் பாதுகாப்பளித்து வந்த பெருமையும் புண்ணியமும் இவர்கட்குண்டு. இதுவேயுமன்றி இச் சமஸ்தானத்தினர் பலர் சிவ நெறியையும் செந்தமிழையும் சிறப்பாகப் பேணி வளர்த்துள்ளனர். "பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாகப் பறக்கையிலே, தேவேந்த்ர தாருவொத்தான் ரகுநாத செயசிங்கமே" என்று இம் மன்னருள் ஒருவரைப் புலவரொருவர் பாடியுள்ளார். கி. பி. 17-ம் நூற்றாண்டில் பெரும்புகழுடன் அரசாண்ட தளவாய் ரகுநாத சேதுபதிமீது, அவர் சமஸ்தான வித்துவான்களில் சிறந்தவராகிய அமிர்த கவிராயர் ஒருதுறைக் கோவை 400 கட்டளைக் கலித்துறையில் பாடியதும், அதற்குப் பரிசிலாகக் கவிராயர் பிறந்த ஊராகிய பொன்னுங்கால் என்னும் கிராமத்தையே அவரும் அவர் சந்ததியாரும் அநுபவிக்கும்படி மானியமாக அச்சேதுபதி மன்னர் அளித்து மகிழ்ந்ததும் தமிழுலகம் நன்கறிந்த செய்திகளாம். கி. பி. 19-ம் நூற்றாண்டிலும் சேதுபதி மரபினர் சிலர் தமிழ்ப் பெருவள்ளல்களாய்த் திகழ்ந்தனர். இவர்கள் முத்துராமலிங்க சேதுபதியும், பாஸ்கர சேதுபதியும், பொன்னுச்சாமித் தேவரும், பாண்டித்துரைத் தேவருமாவார்கள். பின்னிருவரும் தாமே பெரும் புலமை உடையவர்களாகவும், நூல் பல இயற்றியவர்களாகவும், சொல்லின் செல்வர்களாகவும், பல தமிழ் நூல்கள் அச்சேறி வெளிவருதற்குக் காரணர்களாகவும் விளங்கினர். சுமார் 90 ஆண்டுகட்கு முன் முதன் முதலில் அச்சேறிய திருக்கோவையார் உரைப் பதிப்பின் முடிவில் ஆறுமுக நாவலரவர்கள், "முற்காலத்திய பாண்டியர்களைப்போல இக்காலத்திலே இப்

*இவர்கள் வரலாற்றை (1) The Madura Country by J. H. Nelson (2) History of the Nayaks of Madura முதலிய நூல்களில் காணலாம்.

பிரபு அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்று உறுதியாகக் கருதியிருக்கின்றேன்'' என்று பொன்னுச்சாமித் தேவரவர்கள் பெருந்தகைமையைப் பாராட்டி எழுதியிருக்கின்றார்கள். இவ் வள்ளலின் தலைமையில் இம் மண்டபத்திலேயே நாவலரவர்கள் “ சைவ சமயமே சமயம் '' என்னும் செம்பொருள்பற்றிச் சாலச் சிறந்ததொரு விரிவுரை யாற்றித் தக்கவாறு போற்றப் பெற்றார்கள். பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்துத் தமிழன்னைக்குச் செய்த சிறப்பை என்றென்றும் நன்றியுடன் நினைத்தல் நம் கடன்.

வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கிய சேது வேந்தர்கள், மேற்குறித்தவாறு தமிழ்ப் பற்றுடையவர்களாயிருந்ததோடு சிவப்பற்றும் உடையவர்களாய்த் திகழ்ந்தனர். பல திருக்கோவில்களை நிருமித்தும், காத்தும் வந்தனர். இராமநாதப் பெருமானுக்கும் பிற பல தலங்களில் எழுந்தருளியுள்ள சிவ மூர்த்திக்கும் பற்பல கிராமங்களையும், வேறு பல்வகைப் பொருள்களையும் அளித்துள்ளனர். இராமேச்சுரக் கோயிலில் சொக்கட்டான் மண்டபம் என்னும் பெரிய பெரும் பிரகாரங்களை அரிய வேலைப்பாடுகளுடன் கி. பி. 1769-ல் முத்துராமலிங்க சேதுபதியவர்கள் கட்டி முடித்தார்கள். அப் பெருந் திருப்பணிக்கு வேண்டிய கருங்கற்களை யெல்லாம் வெகு தொலைவிலிருந்து கொணர்வித்துக் காண்போர் வியப்புறும் கவினுற திருப்பணி செய்த திறமையையும் அன்பையும் என்னென்று போற்றுவது! அங்ஙனமே கிழவன் சேதுபதியவர்கள் தமது தங்கப் பல்லக்கை மலைவளர் காதலிப் பெண்ணுமை யம்மைக்கு உவந்தளித்த செய்தியும் நம்மை விம்மிதமடையச் செய்கின்றது. சேதுமன்னர்கள் இமய முதல் குமரிவரையிலுள்ள எல்லாப் பகுதிகளிலுமிருந்து இராமேச்சுவர யாத்திரையாக வருபவர்கள் சேது நாட்டில் பயமின்றி யாத்திரை செல்வதற்கு வேண்டிய காவலை யளித்து வந்ததோடு யாத்திரிகர்கட்கு உண்டியும் உறையுளும் தரப் பற்பல இடங்களில் அறச்சாலைகளும் அமைத்தனர். பாண்டித்துரைத் தேவர்



களின் அழுத்தமான சிவபக்தியையும், அதன் வழி விளங்கிய சிவபூஜையின் சிறப்பையும், அப் பூசைமுடிவில் திருவங்கமாலைப் பதிகத்தை யோதுங்கால் யாவரும் பெற்ற ஆனந்தத்தையும் பற்றிப் படிக்கும்போது, நம் நெஞ்சம் உருகுகின்றது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த சேது மன்னர் ஒருவரே, பாஸ்கர சேதுபதியவர்களே விவேகானந்த சுவாமிகளின் தெய்வீக ஆற்றலைக் கண்டுபிடித்து, அவர்களைச் சிக்காகோவில் நடந்த பல்சமயப் பெருஞ்சபைக்கு அனுப்பி வைத்தார். சுவாமிகள் தம் தவத்தின் பொலிவாலும், தெய்வ அருள் பதிந்த அறிவுரை மாட்சியாலும் பாரத நாட்டிற்குப் பிற நாடுகளில் பெரும் புகழ் தேடித் தந்து வெற்றியுடன் தாய்நாடு திரும்பியபோது, சேது மன்னர், விவேகானந்த அடிகளை ஆண்டவனெனவே போற்றிச் சிறப்பிப்பதில் முன்னின்றார். இவ்வாறெல்லாம் செந்தமிழையும் சிவநெறியையும் ஓம்பி வந்த சிறப்புடைச் செல்வர்களிச் சேதுமன்னர்.*

இம் மாண்புடைய வள்ளல்கள், புலவர் பலர் சூழ்ந்திருக்க ஆட்சி செலுத்திய இவ்வரண்மனை மண்டபத்தில் இன்று நாம் திரளாகக் குழுமியுள்ளோம். பசியும் பிணியும் கொந்தளிப்பும், உலகப் போர் மீண்டும் மூண்டுவிடுமோ? மனிதரிற் பெரும்பாலோர் மாண்டொழிவரோ ? என்னும் அச்சமும், பல்கோடி மக்கள் வாழ்வைச் சிதைக்கும் காலம் இது. உலக சரித்திரத்தில் மிகவும் நெருக்கடியான காலம் இது. நாடுகள் பலவும் செய்வகை அறியாது திகைக்கின்றன. நம் கதியும் அதுவே. இந்நிலையில், “ தேறும் வகை என்? சிவலோகா! திகைத்தால் தேற்ற வேண்டாவோ ?'' என்று தெய்வ நம்பிக்கையுடைய நல்லோர் கதறுகின்றனர். உய்வகை யாது ? நாம் சைவசமயர்கள் என்னுமுறையில் இன்று செய்யத் தக்கன எவை ? திருவருளை முன்னிட்டு, இவ் வினாக்கட்கு விடைகாண நாம் முயலக்கடவோம். விண்ணுலகடைந்துள்ள அவ்வள்ளல்களும் நம் கண்ணுக்

*ராவ்சாகிப். மு. இராகவையங்கார் இயற்றிய “ செந்தமிழ் வளர்த்த தேவர்கள் '' என்னும் நூலிற் காண்க.

குத் தெரியாமல் இவண் போந்து நம்மை வாழ்த்தி, வெற்றியடைய உதவியருளுவார்களாக.

இக்கால நிலைமைபற்றி அரசியல் நிபுணர்களும், அறிவியல் நூல் வல்லாரும், தத்துவப் பேரறிஞர்களும் அக்கறையுடன் ஆழ்ந்து சிந்திக்கின்றார்கள். 'வேண்டியதிது' 'செய்வதிது' எனச் செப்புகின்றார்கள். இரண்டு எடுத்துக்காட்டுக்களைக் காண்போம். இன்றைக்கு எட்டுநாள் முன்னர் அமெரிக்கக் குடியரசர் கட்சியின் பெருந் தலைவராகிய Mr. Harved E. Stassen என்பவர் டில்லிமாநகர்க்கு வந்திருந்தபோது வெளியிட்டவொரு கருத்தை முதலிற் காண்பாம். அது பின்வருமாறு :—

"நம் காலத்தில் பெருங் கேள்வியாக இருப்பது, அமெரிக்க வாழ்க்கை முறையும் சோவியத்து வாழ்க்கை முறையும் ஒருங்குவாழ உலகில் இடமுண்டா என்பதாம். இரண்டும் வாழ இடமுண்டு என்றே நம்புகின்றேன். ஆனால் ஒரு வாழ்க்கைமுறை மற்ற முறையைப் பலாத்காரத்தினால் தன்னைப்போலாக்க முயலக்கூடாது. இவ்விரண்டு முறைகளின் முக்கியப் பகுதிகளையும் தம்பாற் கொண்டவைகளும் அல்லது அப் பகுதிகளுக்கு முதன்மை தருவதில் வேறுபடுபவைகளுமாகிய பிற முறைகளும் உள்ளன.

ஆசியாவானது பிறிதொரு சமய அடிப்படையுடையது; வேறுபட்ட தத்துவக் கருத்துமுடையது. இதனால் சிறப்புவகையில் இக் கண்டத்தினர், மூன்றாவதாக வாழ்க்கைமுறை ஒன்றிற்கு வழிகாட்ட வல்ல மூன்றாவது தத்துவக் கருத்தை உலகிற்கு அளித்தல் கூடும். புராதனக் காலத்தில் நாகரிகத்தைத் தொட்டிலிட்டு வளர்த்தது ஆசியா. அக் கண்டமே இக் காலத்தில் உலக சமாதானத்தையும் தாலாட்டி வளர்த்தல் பெரிதும் பொருத்தமுடையதாயிருக்கலாம்."

அடுத்தபடி கருதத்தக்கது, உலகறிந்த தத்துவநூற் பேரறிஞராகிய நம்நாட்டு Dr. S. ராதாகிருஷ்ணன் அவர்கள்* பத்துநாள் முன்னர் கல்கத்தாவில் கூடிய இந்திய

*21-12-50-ல் வெளியாகிய இந்து பத்திரிகையின் 4-ம் பக்கத்தில் அவர் பேருரையின் சுருக்கம் காணவுள்ளது.



தத்துவ சாத்திர மாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரையாகும். நம் நாட்டின் சமயங்களையும் தத்துவ நூல்களையும் பிறநாட்டின் சமயங்களையும் தத்துவ சாத்திரங்களையும் நன்காராய்ந்த இப்பேரறிஞர் கூறுவதை, சமய நம்பிக்கையும், சமயத்தை உள்ளவாறுணர்ந்து வளர்க்கும் வாஞ்சையுமுள்ள நம்மனோரெல்லாம் நுனித்தாராய்தல் மிகவும் அவசியம். அவர் கருத்துக்கள் சிலவற்றின் சாரம் பின்வருமாறு:—உலகில் குழப்பம் மிகுகிறது. தற்காலச் சமுதாயக் கட்டுக்கள் மனிதன் செயலை மட்டுமல்ல, மனிதன் எண்ணிப் பார்க்கும் உரிமையையும் தடுத்து நிற்கின்றன. மனித வர்க்கம் பயங்கரமான பொய்ம்மாறுதலை அடைந்து வருகிறது. இப்படி அறிவுச் சுதந்திரத்தை நசுக்கிவிடுவது மனித வர்க்கத்தை நாளடைவில் ஒழித்துவிடுவதாகும். இரண்டுபோர்கள் நடந்தும் நலமொன்றும் காணாமல் ஏமாற்றமடைந்துள்ளது-இந்நாள் உலகம். மூன்றாம் போருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மனிதர் உடலிலும் மனத்திலும் அமைதிக் குலைவு ஏற்பட்டுவிட்டது. ஆகவே, தேசம், இனம், மதம் என்னும் பிரிவுகளை, மனிதம் என்னும் குறிக்கோளுக்கு அடங்கி நிற்கச் செய்ய வேண்டும் என்னும் நம்பிக்கையுடைய பக்கலைத் தத்துவ சாஸ்திரங்கள் தர வேண்டும்; இவர்கள் வாயிலாக, இப்போதிலும் பார்க்க உலகைச் சீரான நிலைமைக்கு உயர்த்த வேண்டும்.

தத்துவ ஞானம் என்பது, அன்றாட அநுபவத்திற் காணும் எல்லாப் பொருள்களையும் பற்றிய நேர்முகமான அறிவென்னும் அடிப்படைமேல் நிற்க வேண்டும். மானத சிருஷ்டியாகிய கற்பனைகள்மீது சார்ந்திருக்கலாகாது. புறவுலகில் காணும் உண்மைகள், தனி மனிதன் மனத்தில் தோன்றும் நிகழ்ச்சிகளாகிய உண்மைகள், உயர்ந்த ஆன்மாநுபவம் பற்றிய உண்மைகள் ஆகிய எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டெழுதல் வேண்டும். நமது புராதன தத்துவ சாத்திரத்திலிருந்து எக்காலத்திலும் மெய்யென விளங்கும் உண்மைகளை எடுத்துச் சேர்த்துக்கொண்டு, இக்காலச் சூழலுக்கு ஏற்றவகையில் வெளியிட வேண்டும்.

இந்திய ஆன்மீக தருமமானது எல்லாவித வெறிகளையும் எதிர்த்து நிற்பதொன்று. சமுதாய அமைப்பில் புரட்சிகள் நிகழும்இக்காலத்தில், தத்துவ சாத்திர அறிஞர்கள், நமது சமுதாயத்தைத் திருத்தி அமைக்க வேண்டும். மனித வர்க்கத்தின் நம்பிக்கை புத்துயிர் பெறும் வகையில், சமுதாயத்தில் மாறுதல்கள் செய்ய வேண்டும். நாம் இவ்வுலகத்தின் ஒரு பகுதியினர். எனவே, அதன் தொல்லைகளில் நாமும் சிக்கியுள்ளோம். அவற்றின் காரணங்களை அறிதலில் ஊக்கம் காட்டுகிறோம். அதன் வேதனைகளைக் கண்டு துன்படைகின்றோம். ஆகையால், உலகமெல்லாம் சேர்ந்த ஒரு பெருஞ் சமுதாயத்தின் உறுப்பினர்கள் நாம் என்பதை அறிந்து, அதன்படி நாம் வாழ வேண்டும்.

மேற்குறித்த இருவேறு துறை நிபுணர்களும், பிற நாட்டு நல்லறிஞர் வேறு சிலரும் பாரதத் திருநாட்டு மக்கள் இத்தகைய பெரு நிலையில் நின்று உலகிற்கு நல்வழி காட்ட வல்லவர்கள் என்று நம்புகின்றார்கள். ஓராண்டிற்கு முன்பு ரோமாபுரியிலிருந்துகொண்டு, கத்தோலிக்கக் கிறிஸ்துவ உலகில் சமயச் செங்கோல் செலுத்தும் போப் ஆண்டவரின் பிரதிநிதியாகக் கார்டினல் கில்ராய் (His Eminance Cardinal Gilroy, Papal Legate to the first Plenary Council of Bishops in India) என்பவர் பம்பாய் நகரத்திற்கு வந்திருந்தார். அப்போது அவருக்கு அந் நகராட்சிச் சபை வரவேற்பளித்தது. பதில் கூறுகையில், அவர், "இந்தியாவின் எதிர்கால நிலை மிகச் சிறப்புடையதாக இருக்குமென்பது திண்ணமென்றும், அதற்குக் காரணம் இந்தியாவின் தலைவர்களும் பொது மக்களும் ஒழுக்கம் ஆன்மலாப நாட்டம் என்னும் இருபெருந் தன்மைகளை யுடையவர்களாயிருத்தலே" என்றும் தெரிவித்தார். சுவாமி விவேகானந்தரும் ஒரு சமயத்தில், "இறைவன் படைப்புத் திட்டத்தில், உலகிற்கு ஆசார்யதானத்தை வகித்தற்குரியது இந்தியா" என்று கூறியருளினார். பல நாடுகளும், பல இன மக்களும், பல மதங்களும், பண்பாடுகளும் ஒருங்கு கூடும் இடமாக நம்நாடு உலகில் அமைந்துள்ளது கவனிக்கத் தக்கது.

[தொடரும்]

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜ

**45-வது ஆண்டு நிறைவு விழா, இராமநாதபுரம்**

**சைவ மங்கையர் மாநாட்டுத்**

# தலைமைப் பேருரை

[தமிழ்ப் பேராசிரியை -
திருமதி R. இராஜரத்தின அம்மையார், M.A., L.T.]

சைவத்தின் மேற்சம யம்வே
றிலையதிற் சார்சிவ மாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார
முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
றாளெம் முயிர்த்துணையே.

—திருவருணைக் கலம்பகம்

**மெய்யன்பர்களே! சிவநேயச் செல்வர்களே!**

நீங்கள் என்னை இவ்விழாவில் கலந்துகொள்ளச் செய்தமைக்கும், உங்கள் முன்பு பேசப் பணித்தமைக்கும் நன்றி. இன்று நமது சமய வரலாற்றினைப் பற்றிய சில குறிப்புகளைக் கூற விரும்புகிறேன். அவை, நீங்கள் எல்லோரும் அறிந்தவையேயாகும். எனினும் அவற்றை உங்களுக்கு மீண்டும் நினைவுறுத்த விழைகின்றேன். ஆகையால்,

அவற்றிலுள்ள பிழைகளைப் பொறுத்தருளுமாறு கேட்டுக் கொண்டு மேலே செல்லுகின்றேன்.

உலகியலை ஆராய்ந்த அறிஞர், மக்கள் தோற்றத்தை வகைப்படுத்துங்கால், புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, மிருகமாகிப் பின்னர் மனிதரானார் என்பர். அத்தகைய சிறப்பையுடைய மனிதர், கூட்டங் கூட்டமாக வசித்துவருங்கால், போதிய உணவும், உடையும், உறையுளுங் கிடைக்கப்பெற்று நல்வாழ்வு எய்திய பின், சிறந்த காரியங்களில் கவனத்தைச் செலுத்தினர்; அதாவது உலகத்தை இயக்கும் ஒரு மேலான சக்தி உண்டு என்று முடிவு செய்தனர்; அந்தச் சக்தியானது மிகவும் ஆற்றல் வாய்ந்தது என்றும், அது காலம் - பொருள் - இடம் ஆகியவற்றைக் கடந்ததென்றும் தீர்மானித்து, அதற்குக் கடவுள் என்று நாமஞ் சூட்டினர்; அக்கடவுளுக்குரிய உருவத்தையுங் கற்பனை செய்தனர். அப்பொழுது அவர்களுடைய சிந்தையைக் கவர்ந்தது நீலப் பனிவரையாகும். அம் மலைச்சிகரத்தை இறைவனுடைய வெண்ணீறு பூசிய முகமென்றும், அதன் மருங்கில் தோன்றும் செங்கதிர்ச் செல்வனாகிய சூரியனையும், வெண்மதியையும் இரண்டு கண்கள் என்றும், மலைக்காட்டில் தோன்றும் தீயை நெற்றிக் கண் என்றுங் கற்பனைசெய்து, அக்கடவுளுக்கு முக்கட்பிரான் அல்லது சிவன் என அவர் பெயரிட்டனர்; மலையிலுள்ள பனியானது வெய்யோனின் வெப்பத்தினால் உருகி ஓடுவதைக் கண்டு அதனை அவ்விறைவன் உயிர்கள் மாட்டுப் பொழியும் கருணை என்று போற்றி அதற்குக் கங்கை என்று பெயரிட்டனர்; அக்கங்கை நீரில் குளிப்பது புறத்தூய்மையையும், அகத்தூய்மையையும் உண்டாக்குமென்று கருதினர்; அவனுடைய கண்களிலிருந்து பொழியுங் கருணையின் வடிவமே உருத்திராக்கமணி என்று கருதி, அதை விரும்பி யணிந்தனர். ஏனெனில் கருணையில் தோன்றிய மணியை யணிவதால் நாம் மற்ற உயிர்களிடத்தில்



கருணையுடையோராயிருப்போம் என்று ஆன்றோர் கருதினர். வரைவடிவான இறைவன், நீறுபூசிய மேனியையுடையோன் என்றும், அந்நீறானது தூய்மையை ஊட்டவல்லதென்றும் அவர் அறியலாயினர்; மேலும் அந்திவான் பிறையை அப்பெருமான் மகிழ்ந்து அணிந்த ஆபரணம் என்றழைக்கலாயினர்; கரிய காட்டைக் கொண்ட மலைச்சாரலை அவன் போர்த்துக்கொண்ட யானையின் தோல் என்றனர். இன்னும் வேட்டையாடுதலை விருப்புற்ற அவர்கள் கொல்லுவதற்கு அரிய புலியினது தோலை அப்பெருமானுக்குரிய சிறந்த ஆடையாக்கினர்; மந்திரத்தால் மயக்குவதற்கு அருமையான பாம்பினை, அவன் அணியும் உயர்ந்த ஆபரணமாக்கினர்; அறத்தின் வடிவமான விடை அல்லது ரிஷபத்தை அப்பெருமான் ஊர்ந்து செல்லும் வாகனம் என்றனர்; அவ்விறைவனுக்கு நான்கு கைகளைப் படைத்து, ஒன்றில் மானை ஏற்றினர்; வேட்டுவமகளிர் விரும்பி வளர்க்கும் மான், அவன் கருணைமிக்கவன் என்பதோடு கலைநூல் வல்லுநன் என்பதையுங் குறிக்கும். மற்றொரு கையிலுள்ள மூவிலைச்சூலம், அவன் எல்லோருக்கும் தலைவன் என்பதைக் காட்டுவதோடு, அவனுடைய வீரத்தையுங் குறிக்கும். வலது கீழ்க்கை 'அஞ்சவேண்டாம்' என்னும் முத்திரையாகும். நாலாவது கை, உணவுப் பொருள்களைப் பங்கிடுவதைக் குறிக்கும்.

இத்தகைய கற்பனைக்குப் பிறகு, அந்தச் சிவமாகிய செம்பொருளுக்கு அல்லது மங்கலத்தைச் செய்யும் பொருளுக்கு, வீரத்தோடு வேறொரு ஆற்றலும் உண்டு என்று அவர் நினைத்தனர்; அவ்வாற்றலுக்கு, சக்தி அல்லது 'மாயோன்' என்று பெயரிட்டனர்; அந்த மாயோன் கருணையை மேற்கொண்டு, முழுமுதற் பொருளாகிய சிவத்தை இயக்கவல்லவன் என்று கருதினர்; சிவமும் சக்தியும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது இருக்கக்கூடியவரென்றும் ஒரே உடலை உடையவரென்றுங் கூறி, அத்திருவுருவத்திற்கு அர்த்த

நாரீஸ்வரர் என்று நாமஞ் சூட்டினர்; சிவந்த நிறத்தையுடைய சிவனுக்குப்பக்கத்திலே, தண்ணளி மிக்க தாயை நீலநிறத்தை யுடையவளாகப் பாவித்து அமைத்தனர். ஏனென்றால், சூரியனுடைய கதிரிலுள்ள ஏழு வர்ணங்களில் ஒருகோடியில் சிவப்பும், மறுகோடியில் நீலநிறமுமே தெளிவாகக் காணப்படுகின்றன. அதுபோலவே, அடர்ந்த காடானது, செம்மலைச்சாரலை மறைத்திருக்கும்போது சிவப்பும் நீலமும் கலந்த ஓர் உருத் தோன்றுகிறது. அத்தகைய தோற்றத்தையே உமை யொருபாகன் அல்லது மங்கை பங்கன் என்றனர் அவர்.

இச்சிவ சக்திகளாலும் திருப்தி யடையாத மக்கள் இயற்கை வளத்தைக் கண்டு வியந்து இன்னும் பல்வேறு தெய்வங்களைக் கற்பிக்கலாயினர்; மலைநாட்டிலிருந்த மக்கள் செவ்வானத்தைக் கண்டு அதனைச் சேய் என்றும், அச்சேயானது சிவனுக்கும் சக்திக்கும் பிறந்த ஒரு குழந்தை என்றுங் கூறினர். அவ்வாறே பச்சைப் பசேலென்ற முல்லை நிலத்தில் வசித்தவர் அந்நிலக்கடவுள், பச்சை நிறத்தவன், மால் என்னும் பெயருக்கேற்றவன் என்றனர். மேலும் நெருக்கமாகச் சேர்ந்து வசித்துவந்த மருதநில மக்கள் அரசனைப்போன்ற ஒரு கடவுளைப் படைத்து, அவனை 'வேந்து' என்றழைத்தனர்; பரந்த வண்ணக் கடலைக் கண்டு, அந்நீருக்கு முதற்காரணமான ஆற்றலை, 'வருணன்' என்றும் கூறினர்; இவற்றைத் தவிர மானிடருக்குள்ள சிறந்த பண்புகளை யெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு தெய்வத்தைக் கற்பித்து அதற்குக் கந்தழி என்று பெயரிட்டனர். காடடர்ந்த இடத்தில் வசித்தவர் யானையைப் பார்த்து அஞ்சியும், அதன் உயர்வை உள்ளியும், ஒரு யானைமுகத்தானையும் படைத்து, அவனைச் சிவசக்தியின் புதல்வன் என்றனர். தூய பெரியோர், தங்களுக்கு ஞானம் வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுங்கால், அவன் அருள் கூர்ந்து அறிவு பயக்கும் உருவத்தை, மோனகுரு (Silent



watcher) அல்லது தட்சணாமூர்த்தி என்று பெயரிட்டு அழைத்தனர். இந்த அருள் மூர்த்தியே சமணர்களால் விருஷப தேவர் என்றும், பௌத்தர்களால் ஆதிபுத்தர் என்றும் சொல்லப்படுவார் என்றனர் ஆன்றோர்; ஒரு பெண்ணே மகளாகவும், சகோதரியாகவும், தாயாகவும் இருந்து குடும்பத்தை நடத்துவது போலவே ஓரே இறைவன் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்வான் என்றனர்; அவன் செய்யுந் தொழில்களுக்கேற்ப அவனுக்கு வெவ்வேறு பெயர்களை இட்டனர்; அம்மூவரையுஞ் சேர்த்து திரிமூர்த்திகள் என்று வழங்கினர். 'ஓருருவே மூவுருவும் ஆனவன்' என்று அப்பரும், 'ஒருமதி வண்ணன் என்கோ, ஒருவன் என்றேத்த நின்ற நளிர்மதிச் சடையன் என்கோ, நான்முகக் கடவுள் என்கோ' என்று நம்மாழ்வாரும், 'அரியாகிக் காப்பான், அயனாய்ப் படைப்பான், அரனாகி யழிப்பவனுந்தானே' என்று காரைக்காலம்மையாருங் கூறியுள்ளனர். 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம்பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ' என்ற மணிவாசகப் பெருமான் பாட்டும் இதனை வலியுறுத்துகின்றது. இறைவனின் பல்வேறு குணங்களை யுணர்த்துதற்குப் பல பெயர்களை இட்டனர்; எங்கும் நீக்கமற நிற்கிறான் என்பதை விஷ்ணு என்ற பெயராலும், உயிர்களை யாண்டுகொண்டவன் என்பதை ஆண்டவன் என்னும் பெயராலும், இளமையும் அழகுமுடையான் என்பதை முருகன் என்னும் பெயராலும், இயங்குந் தன்மையுடையோன் என்பதை நடராஜன் என்ற பெயராலும் குறித்தனர். ஒரு தெய்வ உணர்வு உரிமையையும், பல தெய்வ உணர்வு அடிமை மனப்பான்மையையுங் குறிக்கும் என்பர் இக்காலத்தவர். ஆனால் நம்முன்னோர் அத்தெய்வத்தைத் திருமூர்த்திகளென்று சுட்டி, பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று முக்கூறாக்கி மகிழ்ந்தனர்; மேலும் அம்மூவருக்கும் ஏற்ற

தேவதைகளையுங் கற்பனைசெய்தனர். உதாரணமாக, உருத்திரன், உமை, கங்கை - திருமால், சீதேவி, பூதேவி - அயன், சாவித்திரி, சாஸ்வதி - முருகன், வள்ளி, தெய்வயானை - விநாயகன், சித்தி, புத்தி இவர்களையும் மும்மூர்த்திகள் என்று கூறுவதுண்டு. இவ்வாறு பல தெய்வங்களைக் கற்பனை செய்தபின், அத்தெய்வங்களுக்குக் குடும்பங்கள் உண்டு என்று சொல்லி, அவர் புராணங்களையும் புனையலாயினர். அப்புராணங்கள் பெரும்பாலும் சீரிய கருத்துக்களை விளக்கலாயின.

எடுத்துக்காட்டாக இராவணன் என்ற தீயோன் கைலாயி கிரியைத் தூக்கிச் சிவபிரானுக்கு ஊறு செய்ய விழைந்தான் என்னும் கதையானது, மங்களத்தைச் செய்பவனாகிய சிவன் அல்லது பெருமான் தீயவர்களுக்கும் கருணை செய்யக்கூடும் என்பதை உணர்த்துகிறது. அங்ஙனமே அரியும், அயனும் கடவுளைத் தேடிச்சென்ற கதையானது, செருக்கின்றிப் பணிவோடு தேடினாலே இறைவனைக் காணலாம் என்பதை யறிவுறுத்துகின்றது.

இவ்வாறு, பல தெய்வங்களையும் புராணங்களையும் புனைந்த பின்னரும் மக்கள் திருப்தியுறாது, இறந்தவருடைய ஆவிகளை மகிழ்வித்து நன்மைபெற விரும்பி அவர்களுக்கும் வழிபாடு செய்யலானார்கள். இதனாலும் தெய்வங்களின் தொகை பெருகலாயிற்று. மேலும் அத்தெய்வங்களுக்கு வேள்விகள் நடத்தி உயிர்க்கொலையும் அவர் நிகழ்த்தினர். இதனால் குடியும் பெருகலாயிற்று. மக்களுக்குள்ளும் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கலாயினர். இக்கொடுமைகளை நீக்கவே புத்தர், மகாவீரர், இயேசுநாதர், நபிநாயகம் முதலியோர் தோன்றலாயினர். சீரிய நூல்களாகிய திருக்குறளும், நாலடியாரும் தோன்றி, விழுமிய கருத்துக்களைப் பரப்பின. இன்னும் கவுந்தியடிகளும், மணிமேகலையாரும் போந்து அன்பு, அருள், அறம் முதலியவற்றைப் பரப்பி, ஊன் வேள்வியையும், உயிர்க்கொலையையும் தடுத்தனர்.



சாதியைக் கடிந்து, சமரசத்தைப் போதிக்கப் பிறந்தவர் பலராவர். அன்னார்தம் கொள்கைகளை யொட்டியே இக்காலத்தும் குடி நிறுத்தப்பட்டுள்ளது. பலியிடும் வழக்கமும் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு வருகிறது. 'அன்பே சிவம்' என்பார் ஆன்றோர். உயிர் வருந்துவதைக் கண்டு துன்புறுவோனே ஹிந்து ஆவான். எனவே இந்தியாவில் பிறந்தமையாலோ, சிந்துநதி பாயப் பெற்றதனாலோ இந்நாட்டில் பிறந்த ஒவ்வொருவனும் ஹிந்து என்ற பெயருக்கு உரிமையுடையவனாகான். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் ஹிந்து என்ற பெயருக்கேற்ப ஒழுகுதல் வேண்டும். கடவுளுடைய பூசனைக்கு உதவும் தூய மலர்களை யொத்தவை சீரிய குணங்கள் என்பர் பெரியோர். அவையாவன: கொல்லாமை, ஐம்பொறியடக்குதல், இரக்கம், தவம், அன்பு, அறிவு, மெய் முதலியன. சைவமதம் என்பது அன்பை அறிவுறுத்தும் மதமாகும். எப்பெயர் கொண்டு வழிபடினும் அதனை இறைவன் ஏற்றுக்கொள்வான் என்னும் பரந்த கொள்கையையுடையது இம்மதமேயாகும். எனினும் பிறமதப் பிணக்கை அறவேயொழித்தல் நம் கடனாகும்.

இறைவன் மக்களின் உள்ளத்தில் கோயில் கொண்டுள்ளான் என்பதை விளக்கத் திருவள்ளுவர் 'மலர்மிசை ஏகினான்' என்றும், திருமூலர் 'சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்றும், அப்பர் 'நினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவன்' என்றுங் கூறியுள்ளனர். இக்கருத்தினை யடிப்படையாகக் கொண்டே, மனக்கோயில் கொண்ட மாண்புடையார் ஆன அன்பர் பூசலார் நாயனாரின் சரிதம் பரவலாயிற்று. மனத்தில் இருக்கும் பரமனை யறியாமல் தடுப்பது உயிர்களின் அறியாமையாகும். அப்பற்று அற்றவனை மறக்குங்கால், நம் நெஞ்சில் தீய எண்ணங்கள் எழும். அவற்றைப் போக்கவே 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்' என்றும், 'என் உள்ளங் கவர்

கள்வன்' என்றும் பெரியார் பாட்டிசைத்தனர். சகோதர நேயமிருக்கும் நெஞ்சத்தை விட்டு ஆசைப்பேயானது அகலும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சமரஸ மனப்பான்மையும் கைவரப் பெறும் என்பது ஆன்றோர் துணிபு. மூப்பு, பிணி, சாக்காட்டைப் போக்குவது தியானம் என்று அறிந்த சான்றோர் அமைதியை நாடினர்; இல்லறம், துறவறம் ஆகிய இரண்டிலும் அமைதியுண்டு என்று உணர்ந்தனர்; ஆகையால் உள்ளத்துறவையே மேற்கொள்ளலாயினர்; இக்கொள்கையை வலியுறுத்தவே இறைவனையும் பிச்சாண்டியாகப் பாவித்து வணக்கஞ் செலுத்தினர்.

மேலும், கடவுளுக்கு ரூபம், ரூபாரூபம், அரூபம் முதலியவற்றையுங் கற்பித்தனர் பெரியோர். அரூபியே சிவம் என்றும், ரூபாரூபியே சதாசிவம் என்றும், ரூபியே ருத்திரன் என்றும் கூறினர். அருவுருவமே இலிங்கவடிவமாகும். அருவுருவத்திருமேனியை ஆகாசம் என்பர். விளக்கொளியில் வெளிச்சமும் வெம்மையும் கலந்திருப்பதுபோல இறைவனிடம் சிவமாகிய மேன்மை வாய்ந்த தன்மையும், சக்தியாகிய அருளும் கலந்திருக்கின்றன. இக்கலப்பினை, மின்சாரத்திலுள்ள 'பாஸிடிவ்' 'நெகடிவ்', போன்றவை என்றும், மரம் முதலிய உயிர்களில் அமைந்துள்ள ஆண் பெண் போன்றதென்றுங் கூறுவர். அணுச்சக்தியை ஆராய்ந்தோர் அவ்வணுவிலும், மின்சத்து என்று நுட்பப் பொருளும், மின் அணு என்ற வேறொரு வஸ்துவும் உண்டு என்றனர்; அந்த மின்சத்தானது, சிவப்பு நிறத்தோடு இலிங்க வடிவமாக நடுவில் இருக்குமென்றும், அதைச் சுற்றிலும் நீலநிறத்தோடு கூடிய மற்றொரு பகுதி வட்ட வடிவமாக இருக்குமென்றும் கண்டறிந்தனர்; இவ்விரண்டினையும் சேர்த்து நோக்குங்கால், இலிங்கமும், ஆவுடையும் சேர்ந்த ஓர் உருவம் தோன்றுகிறது. அவ்வாறே, சூரியனை இடையிலுள்ள இலிங்கமாகவும், அதனைச் சுற்றி வரும்



கோள்களைப் பீடமாகவும் கொண்டு நோக்கினாலும், சிவலிங்கவடிவமே காணப்படுகிறது. நாகலிங்கப்பூ, தங்க அலரி முதலிய மலர்களின் இடையிலும் இவ்வடிவத்தைக் காணலாம். இன்னும் பெரும்பாலான விதைகளும் லிங்க வடிவத்தைக் கொண்டுள்ளன. ஆகையால் உலகத்தோற்றத்திற்குக் காரணமாகிய இறைவனையும் சிவலிங்க வடிவத்தில் நிறுவலாயினர். தீக்கொழுந்தின் வடிவமும் அதுவேயாகும். இலிங்கம் என்ற சொல்லுக்கு ஒடுக்கமும் தோற்றமும் என்பது பொருள். லி - ஒடுங்குதல், கம் - தோன்றுதல். எனவே ஆன்மாக்கள் தோன்றவும், ஒடுங்கவும் இடமாயிருக்கும் மூலப்பொருள் லிங்கம் என்றும் பெயர் பெற்றது.

இத்தகைய ஆண்டவனை, 'பதி' அல்லது தலைவன் என்றும், உயிர்களைப் 'பசு' அல்லது ஆன்மா என்றும் இவ்விரண்டினையும் ஒன்று சேர்க்கும் தளையை அல்லது கட்டை 'பாசம்' என்றும் அழைத்தனர். ஆன்மா அல்லது பசுவின் மலமாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் வெந்து நீறான பிறகு பதி அல்லது இறைவனை அடைய முடியும். இக்கருத்தை விளக்கவே பசுவின் சாணத்தை நீறாக்கி அணிந்துகொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. தூய்மையின் பொருட்டு வெண்ணீறு பூசிய பெரியோர் தாம் வணங்கிய இறைவனுக்கும் வெண்ணீறணிவித்து அவனை நீறு பூசிய மேனியன் என்றழைத்தனர். இதனாற்றான் பனிவரை வடிவமாகிய இறைவனை சாம்பல் மேனியான் என்று கூறியதாக முன்னரே பார்த்தோம்.

உலக மக்களை உய்வித்தற் பொருட்டு, அவ்வப்போது நாயன்மார்கள், ஆழ்வார்கள், தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்ட பெரியோர்கள் தோன்றி நல்லுபதேசம் செய்ததோடு அரிய கருத்துக்களை விழுமிய நூல்களாக்கி, தம்முடைய பிற்கால சந்ததியாருக்கும் பயன்படுமாறு கொடுத்துச் சென்றனர். அந்நூல்களே பன்னி

ரண்டு திருமுறைகள், பிரபந்தம், விவிலியம் முதலியவைகளாம். இந்நூல்களைப் படித்து, அவைகளில் கூறப்பட்டதற்கேற்ப ஒழுகி வந்தால், உலகம் உய்வுறும் என்பது திண்ணம். "வேறுபடும் சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளே நின்விளையாட்டு அல்லால் மாறுபடும் கருத்தில்லை", என்ற அருள் வாக்கே இதற்குச் சான்று தரும். அறியாமையையுடைய உயிர் துன்பமுடையதாயிருக்கிறது. கடவுள் தன்மாட்டுள்ள இரக்கத்தினால் மாயையையும் அவ்வுயிரையும் ஒன்று சேர்க்கிறார். அதன் விளைவாகவே படைப்பு ஏற்படுகிறது. பகுத்தறிவோடு கூடிய மானிடப் பிறவியில், கடவுளை அறிய முயலுதல் வேண்டும். "எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிரில் அங்கங்கிருப்பதும் நீயன்றோ பராபரமே" என்ற பெரியார் வாக்குக்கிணங்க எங்கும் கடவுளைக் காண விழையும் முயற்சியைத்தான் வழிபாடு என்கிறோம். அவ்வழிபாடு இருவகைப்படும். ஒன்று ஆலய வழிபாடு; மற்றொன்று உயிர் வழிபாடு. இதனையே நடமாடும் கோயில், படமாடும்கோயில் என்று அழைப்பர் பெரியோர். நடமாடும் கோயில் வழிபாடானது சாதி, மதம் முதலிய வேறுபாடுகள் அற்றதாகும். அவ்வழிபாட்டுக்குரியவர் மிகுந்த பகுத்தறிவும் பரிபக்குவ நிலையையும் உடையவர். அவர்கள் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென்னும் உயரிய கொள்கையும், சீரிய அறிவும் வாய்ந்தவராவர்.

படமாடும் கோயிலை அமைத்த பெரியோர், அதனை ஒரு மனிதன் படுத்திருக்கும் தோற்றமாகக் கட்டினர். இக்கோவிலுக்கு மனிதருக்குள்ள ஐந்து கோசங்களையும் ஐந்து மதில்களாக்கினர்; தலைப்புறத்தையும் இருபக்கக் கைகளையும் பாதத்தையும் நான்கு திசைகளிலும் மனிதர்கள் போக்குவரவுக்குரிய நான்கு வெளி வாயில்களாக அமைத்தனர்; அவ்வாலயத்துக்குரிய பிரதான மூர்த்தத்தை அல்லது இறைவனைக் கருப்பக்கிரகம் என்னும் இடத்தில் நிலை



நிறுத்தினர்; அவ்வுருவினைக் கல்லிலோ செம்பிலோ அல்லது தங்கத்திலோ செய்து அமைத்தனர். இதைக் கண்ட பெரியோர்கள் எங்கும் நிறைந்த இறைவனை ஓர் இடத்தில் காண நினைப்பது அறியாமை என்று கருதி, "கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" என்று அறிவுறுத்த நினைத்தனர். அதற்குச் சமாதானமாக, வேறு சிலர் பூமியின் அடியில் எங்கு பார்த்தாலும் நீரோட்டம் இருந்தாலும், நீரை விரும்புவோர் ஓர் இடத்தில் கிணறு வெட்டி, அந்நீரினைத் தேக்கிப் பயன்படுத்துவது போல எங்கும் நிறைந்தவனாகிய ஈசனைச் சிறப்பாக ஓர் இடத்தில் நிலைக்கச் செய்து, அவனுடைய அருளைப் பெற நினைப்பது ஏற்றதாகுமென்பர். அருமை நண்பன், அல்லது தேசத்தலைவனுக்கு வணக்கம் செலுத்த விழைவோர், எப்படி அவனுடைய சிலையையோ, அல்லது படத்தையோ வைத்துச் சிறப்புச் செய்வரோ, அப்படியே இறைவனிடத்தில் பக்தி கொண்ட மக்களும் அவன் உருவினை நிறுத்தி, அதற்கு வழிபாடு செய்யலாயினர். அருவமான கடவுளுக்கு ரூபத்தைக் கற்பித்தது எங்ஙனமோவெனில், அவ்விறைவனுடைய அன்பில் திளைத்து, அவனைக் காணும் பேறுபெற்ற மேலோருடைய பாடல்களில், அவனை அவர்கள் கண்டாங்கு விவரித்திருத்தலைக் கருத்திற் கொண்டேயாகும். நெருப்பை உண்டாக்க நினைப்பவர், சூரியனுக்கும் பஞ்சுக்குமிடையே கண்ணாடியைப் பயன்படுத்துவது போல, வீடுபேறடைய விரும்புவாரும் இறைவனுடைய விக்கிரகங்களையும் பயன்படுத்துகின்றனர். பல திறப்பட்ட மக்களும் இறைவனிடத்தில் அன்பைச் செலுத்தியது பலவகையாகும். அந்நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவர். எக்காலத்தவரும் இறைவனை அடைய சன்மார்க்கம், சகமார்க்கம், சத்புத்திர மார்க்கம், தாசமார்க்கம் ஆகிய நெறிகளைக் கடைபிடிப்பது மரபு. நம் காலத்திலேயே வாழ்ந்த கருமயோகி

யாகிய காந்தி மஹானை ஒத்தவர்கள் கடைபிடிப்பது அன்பு நெறியாகும்.

இதுவரையில் இறைவனது வழிபாட்டைக் குறித்து ஆராய்ந்தோம். இனி, பொதுவான சில கருத்துக்களைக் கூறுவோம். உலக இருளினைப் போக்கப் பன்னிரண்டு ஆதித்தர் உதவுவதுபோல, உயிர்களின் அஞ்ஞான இருளை நீக்குதற்குப் பன்னிரண்டு திருமுறைகள் உதவுகின்றன. மேலும், இந்நூல்கள் இறைவனாலேயே தக்கார் வாயிலாகக் கூறப்பட்டனவாகும். சில முனிவர்கட்கு இறைவன் ஞானாசிரியனாய் அமர்ந்து உபதேசித்ததை 'ஆலநீழல் அன்றிருந்து அறநெறி நால்வர் கேட்க நன்கினிது உரைத்தனை', 'அருந்தவருக்கு ஆலின்கீழ் அறமுதலா நான்கினையும் இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ' என்னும் அடிகள் விளக்குகின்றன. அம்முனிவருக்கு இறைவன் அருள் செய்தது போலவே, மணிவாசகப் பெருமானுக்கும் குருந்த மரத்தடியிலிருந்து உபதேசித்தான் என்று வரலாறு கூறுகின்றது. தமிழ் வியாசராகிய நம்பியாண்டார் நம்பிகளும், சேக்கிழாரும், தமிழ்நாட்டுக்குச் செய்த தொண்டு சீரியதாகும். அனைவரும் அவற்றைக் கற்றுக் கடைப்பிடித்தல் வேண்டும். 'பாடுவார் பசி தீர்ப்பாய்' என்ற தொடர் சிந்திக்கற்பாலது. திருமுறைகளைப் படித்தாலும், பக்கம் நின்று கேட்டாலும் உள்ளத்து உணர்ச்சியானது எழுச்சி பெற்று, உலகையும் உடலையும் மறக்கச் செய்கிறது. மேலும் அவ்வுணர்ச்சிப் பெருக்கு நம்மைச் சிவபெருமானது திருவுருவில் கலந்து நின்று கண்ணீர் மல்கி, ஆனந்தத்தில் திளைக்கச் செய்கிறது. இப்பாடல்களைப் பாடியவர்கள் சிவஞானச் செல்வர்கள்; கடவுளோடு தொடர்பு கொண்டவர்கள். ஆகையால், அன்னார் வாக்கு மேன்மையுற்றது. அவர்களுடைய அருள் வாக்காலேயே பூம்பாவை போன்றவர் உயிர் பெற்றனர். 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்ற பாடலால் வெறிகொண்ட யானையும் அடங்கியது.



இறைவனைப் போலவே, திருமுறைகளும் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்களைச் செய்ய வல்லவை. இறைவனானவன் தன்னடியார்கள் பாடல்களால் மகிழ்பவன். அத்தகைய அரிய பாடல்களுக்குக் குறைவில்லை. சுமார் 18379 பாடல்கள் நம் திருமுறைகளில் உண்டு என்று கணக்கிட்டிருக்கின்றது. அவற்றை ஊக்கத்தோடு பயன்படுத்த வேண்டியவர் பெண்களே யாவர். இவற்றில் சிலவற்றையேனும் தாங்களும் ஓதி, குழந்தைகளையும் ஓதச் செய்தல் வேண்டும். திரைப்படக் காட்சியில் தாம் கேட்ட பாடல்களைச் சிறு குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் ஆர்வத்தோடு கற்கின்றனர். அத்தகைய விருப்பத்துடன் சில தேவாரப் பாடல்களையேனும் படித்தல் வேண்டும். 'டடடா' பாட்டைக் கற்பதுபோல் 'ஹரஹர' பாட்டையும் பயிலுதல் வேண்டும். ஏனெனில், நமது மதக் கொள்கைகள், பிறமதத்தினராலும் பாராட்டப்பட்ட பெருமையுடையன. இக்கருத்தினை விவேகானந்தர் சரிதை வலியுறுத்தா நிற்கும். ஆங்கிலக் கல்வியில் ஈடுபட்ட மக்கள் விபூதி தரிக்கவும் கூசுகின்றனர். வெண்ணீறு, தூய்மையைக் குறிப்பதுடன், நீர்த்தோஷத்தையும் போக்குமென்பது ஆன்றோர் கண்ட உண்மை. நெற்றியில் சந்தனம் தரித்தல் சிவபெருமானது மூன்றாவது கண்ணை நினைவூட்டும். அத்துடன், பல நரம்புகள் சேரக்கூடிய நெற்றியிலுள்ள வெப்பத்தையும் போக்குமென்பர் அறிஞர். வைணவப் பெரியார் தரிக்கும் திருமண்ணும் உலக நிலையாமையையும், யாவரும் இறுதியில் மண்ணாவதையும் நினைவூட்டும். எனினும், இவ்வழக்கங்கள் அநாகரீகமானவை யென்று நாம் கருதுகிறோம். நம் பெரியோர் சிறந்த கருத்துக்களுடனே சில பழக்க வழக்கங்களை யேற்படுத்தினார்கள் என்பதை நாம் அறிவது எந்நாளோ அந்நாளே நன்னாளாகும்.

இனி அவ்விறைவனை வழிபடுவதற்காகக் கோவிலுக்குச் செல்லும் நாம் கவனிக்க வேண்டிய விஷயங்களை

ஆராய்வோம். இறைவன் எழுந்தருளி இருக்கும் இல்லி
னைத் தூய்மையாக, எண்ணெய் வழுக்கும் அழுக்கும்
சேராமல் வைத்திருத்தல் வேண்டும். விமானங்களை நன்
ருக வைத்திருத்தல் வேண்டும். விளக்குகளைத் துடைத்துத்
தூய திரியிடுதல் வேண்டும். வருவாய்க்கு ஏற்றவாறு வழி
பாடுகளும் திருவிழாக்களும் செய்தல் வேண்டும். அர்ச்
சனைக்கு அவகாசம் இல்லாதபோது விரைவாகச் செய்யச்
சொல்லலாகாது. பாமர மக்களும் அறிந்துகொள்ளும்
வண்ணம் இறைவன் புகழையும், திருநாமத்தையும் சொல்
லச் செய்தல் வேண்டும். அர்ச்சகர் பயிற்சிக்குக் கலாசாலை
கள் நிறுவுதல் வேண்டும். கிரியைகளின் கருத்தை மக்கள்
விரும்பிக் கேட்கும்போது விரித்துச் சொல்லக்கூடிய ஆற்
றல் அர்ச்சகர்களுக்கு இருத்தல் வேண்டும்.

பிள்ளையார், முருகன், சிவபெருமான், அம்மை, திரு
மால், ஞாயிறு ஆகிய ஆறு தெய்வங்களுக்குப் பூஜை செய்
வோர் அறுவகைப்பட்ட பார்ப்பனர் ஆவர். அவர்கள் வீண்
வார்த்தைகளைப் பேசாத மக்களாய் இருக்கச் செய்தல்
பொது மக்கள் கடனாகும். வழிபாடு நடத்துவோர் நல்
லொழுக்கமும், தூய்மையும் உள்ளவர்களாய்த் திகழ்தல்
வேண்டும். வசதியாகப் புகக்கூடிய அளவு போதிய மக்
களைக் கோவிலுக்குள்ளே விட்டு, அவர்கள் திரும்பிய
பிறகு மற்றவரை அனுப்புதல் வேண்டும். திருவிழாக் காலங்
களில் ஜன நெருக்கத்திற்கு இடந்தரலாகாது. இசைப்
பயிற்சி யுடையோர், தேவாரம், திருவாசகம் முதலியவை
பாடல் வேண்டும். வருவாய் மிக்க கோயிலில் தமிழ் வேதம்,
சித்தாந்தம், சமயச் சடங்கு போன்றவைகளைப் போதிக்
கும் கலாசாலைகள், நூல் நிலையங்கள், சொற்பொழிவு,
இசை, கூத்து முதலியவற்றிற்கு ஏற்ற வசதியிருத்தல்
வேண்டும். சோம்பேறிகள் உறங்கவும், பிச்சைக்கார
நோயாளிகள் தங்கவும் இடந்தரலாகாது. தருமம் என்று
தனியாகக் கொடுக்காமல் அவர்களுக்குத் தொழில் செய்ய



வசதியளித்து, அதனால் ஏற்படும் கூலியின் மூலம் தருமம்
செய்தல் சாலச் சிறந்ததாகும். அன்பும் ஆதரவும் மிக்க
இடமாகக் கோவிலை மாற்றுதல் வேண்டும்.

மேலும் சில விரதங்களை மேற்கொள்ளுதல் நன்மை
யைப் பயக்கும். உதாரணமாகப் பகைவனை வென்ற விழா
வாகக் கருதப்படும் கந்த சஷ்டியில் தெய்வத் தியானம்,
பட்டினி கிடத்தல் முதலியவை பொறியடக்கத்தை ஊட்
டும். பட்டினி உடலோம்பலுக்கும் நல்லது. ஆனால்
ஆண்டு முழுவதும் விழாக்கள் கொண்டாடியும், ஆடம்பர
மாகச் செல்பவர்களுக்குச் சோறு படைத்தற்காகக் காது
குத்துதல், கல்வி பயிற்றுதல் முதலிய சிறு சடங்குகளுக்
கும் பொருள் விரயஞ் செய்தலுமாகாது. திருமணம்,
சீமந்தம் முதலிய விசேடங்களிலும் ஏழைகளுக்கும் தக்க
வர்களுக்கும் அன்னமிடுதல் புண்ணியச் செயலாகும். அங்
ஙனமின்றி செல்வர்களுக்கு ஆடம்பரமாக விருந்தளித்து
பணவிரயஞ் செய்து பண்டங்களைப் பாழாக்கி எறிதல்
கூடாது. இத்தகைய குற்றங்களுக்கு ஆண்களைவிடப்
பெண்களே பாத்திரமாவார்கள். ஆனால் பெண்ணுக்குக்
கொடுக்கப்பட்ட இடமோ உயர்ந்தது. மொழிக்கும் நாட்
டுக்குங்கூட தாயே இடம் பெற்றாள். கலைக்கும், திருவுக்கும்
மகளையே உரியவள் என்றனர் பெரியோர். ஆகையால்
நாமும் அச்சிறப்பினுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுதல்
வேண்டும். ஔவையாருரையை மூவேந்தரும் ஏற்றனர்.
ஏன்? அன்னாரது அறிவினாலும், ஆற்றலினாலும், ஒழுக்கத்
தினாலுமேயாம். இக்காலத்து ஆங்கிலப் படிப்பில் விருப்பங்
கொண்ட சிலர் தாய்மொழியையும் மறந்து, மதத்தையும்
புறக்கணித்து, எல்லா வகையிலும் மேலைநாட்டினரைப்
பின்பற்றுகின்றனர். ஆனால் அயல் நாட்டு மாதர்
கல்வி கற்று, தம் நாடு கடந்து வந்து, நம் நாட்டு அனா
தைக் குழந்தைகளுக்காகவும் நோயாளிகளுக்காகவும் பாடு
படுவதைக் கண்டு தாமும் அவ்வாறு செய்தல் வேண்டும்

என்று நினைத்தார்களில்லை. நம்நாட்டு அபலைகளுக்காகவும், விதவைகளுக்காகவும் நாம் செய்துள்ளது ஒன்றுமில்லை. அந்நிய மதத்தார் எத்தனையோ வகையில் தொண்டாற்றி வருகின்றனர். நமது பொருட் செல்வம் நகையிலும், பட்டாடைகளிலும், யாத்திரைகளிலும் ஆடம்பர அலுவல்களிலும் இறைக்கப்படுகின்றது. நாமோவெனில் நமது குழந்தைகளை ஆங்கிலப் பள்ளியில் சேர்த்துவிட்டு நமது பழந்தமிழ் மதக் கொள்கைகளைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களாய் வளர்த்து வருகிறோம்; மேலும் வீட்டு வேலைகளையும் கற்பிக்காது இருக்கிறோம். சமயக் கல்வி வீட்டிலேயே பெற்றோர்களாலேயே போதிக்கப்படுவதுதான் சாலச் சிறந்ததாகும். அம்மை அப்பனை, பெண்ணொரு பாகனைத் தொழும் நாம் அடிமைகள் என்ற சொல்லுக்கு இலக்காகாமல் உரிமைக்குப் பாத்திரமானவர்களாய் நடந்து கொள்ளல் வேண்டும். சாதி வேற்றுமை பெண்டிர் கூட்டத்தில்தான் அதிகம் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும், ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்" என்பதற்கிணங்க வேற்றுமையை மறக்க வேண்டும். அப்போதுதான் கடவுள் அருளும், நால்வர் துணையும் கிட்டும். அதற்குப் பல கூட்டங்களும் ஸ்தாபனங்களும் தேவை. "தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்" ஆகிய ஈசன் அருள் எல்லாக் காரியங்களையும் முற்றுவிக்கும் என்பது திண்ணம். சமாஜத் தலைவரும் மற்றுமுள்ளோரும், பல நூல்களையும் அடக்க விலைப் பதிப்புகளாக்கி விற்றுப் பலரும் பயனடையச் செய்கின்றனர். ஆனால் அவற்றைப் படித்துப் பரப்புவதற்குத் தாய்மார் ஊக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டுப் பெண்கள் அனைவரும் மங்கையர்க்கரசிகளாகவும், திலகவதிகளாகவும் ஒழுகும் நாளே நாமும் உலகமும் வாழும் நன்னாளாகும். வாழ்க சைவம்! வாழ்க வையம்!

---

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை

18872

ஆர்க்காடு - புரிசை - க. முருகேச முதலியார், - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், வரதராஜலு செட்டியார்- ஆர்க்காடு.

தஞ்சாவூர் - டி. என். சபாபதி முதலியார், விருத்தாசலம் செட்டியார் - ஆடுதுறை, மஞ்சக்கொல்லை - சம்பந்த மூர்த்தி முதலியார்

திருச்சி - ஆர். பஞ்சநதம் பிள்ளை, எஸ். கனகசபாபதி பிள்ளை, ஜி. வரதராஜன்

மதுரை - வி. வி. சி. ஆர். முருகேச முதலியார், மு. ப. இராமநாதஞ் செட்டியார்-நெற்குப்பை, வித்வான்-சிவக் கொழுந்து - பெரியகுளம்

இராமநாதபுரம் - இராஜகுமார் - காசிநாததுரை, வ. எம். இராமமூர்த்தி, சொ. நாராயணஞ் செட்டியார்

திருநெல்வேலி - இ. கே. சேதுராமலிங்கம் பிள்ளை, மு. சுப்பிரமணியம் செட்டியார், ந. சின்னகண்ணு பிள்ளை

சேலம் - ஆர். வி. கோபால், பொ - வேலூர் - மாணிக்க வாசகம், வி. எஸ். சோமசுந்தம் - பாண்டமங்கலம்

பெங்களூர் - ஆ. ர. அண்ணாமலை முதலியார்

கோயமுத்தூர் - சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், ஆர். சி. கதிர்வேல், பி.ஏ. - ஈரோடு, வி. சி. சுப்பையா கவுண்டர்

நீலகிரி - கோவிந்தசாமி பிள்ளை

யாழ்ப்பாணம் - அ. அருளம்பலம், அம்பிகைபாகன்

கொழும்பு - கனகரத்னம், சிவசுப்பிரமணியம்

சித்தூர் - மங்கலக்கிழார்

மலேயா - கா. இராமநாதஞ் செட்டியார்

## ஆராய்ச்சிக் கழகம்

ம. பாலசுப்பிரமணிய முதலியார், எஸ். வையாபுரிப் பிள்ளை, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், டி. எஸ். கந்தசாமி முதலியார், மு. வரதராசனார்.

## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. |
|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் ... | 3 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் ... | 0 |
| திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை | 0 |
| குகார்ச்சனை திருமந்திரம் ... | 0 |
| திருவாசகத் திரட்டு 6 பை சீவக சிந்தாமணி .... | 1 |
| கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் மூந்நூல்.... | 0 |
| அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு .... | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை .... | 0 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு | 7 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (முற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) .... | 0 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... | 0 |

தபாற்கூலியுடன் முன்பணம் அனுப்புக. நூல்… வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மல… இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இ… ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செ… வுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 6 (1933), 14 (19… 15 (1942).]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Str… Royapettah by V. Rajammal, (P. I. Card No M. S. 115) Edite… Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for … Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Str… Vellala Tey…mpet, Madras-6. P. I. Card No. M. S. 81.